# சுபீட்சம்

SUPEEDSAM – EVERYTHING FOR PEOPLE

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

செவ்வாய்க்கிழமை 18.01.2022 | supeedsam.com | supeedsam@gmail.com





# நாடு முழுவதும் 2 மணி நேர மின் வெட்டு?

## மின்சார சபைக்கு இனி எரிபொருள் வழங்க முடியாது; வலுசக்தி அமைச்சர்

(காந்தன்)

கடந்த வாரம் மின் உற்பத்தி நிலையங்களில் ஏற்பட்ட கோளாறு காரணமாக, நாடளாவிய ரீதியில் சில பகுதிகளில் மின் வெட்டு அமுல்படுத்தப்பட்டது.

அதனை மீளமைப்பதற்காக இரண்டு தடவைகளில் 3,000 மெற்றிக் டன் டீசல் வழங்கப்பட்டதுடன், இனி டொலர்கள் இன்றி அவ்வாறு எரிபொருளை வழங்க முடியாது என வலுசக்தி அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

இலங்கை மின்சார சபை டொலர்களை வழங்கினால், மசகு எண்ணெய்யை இறக்குமதி செய்து வழங்க முடியும் என அவர் தெரிவித்துள்ளார்..

இலங்கை மின்சார சபைக்கு வழங்குவதற்கு தேவையான எரிபொருள் கையிருப்பில்

02 ஆம் பக்கத்தில்...

## மின்சார பொறியியலாளர்கள் இன்று போராட்டத்தில்

(ராஜ்)

சட்டவிரோதமாக நியமிக்கப்பட்ட இலங்கை மின்சார சபையின் புதிய பொது முகாமையாளர் அந்த பதவியிலிருந்து நீக்கப்படாவிட்டால் கடுமையான தொழிற்சங்க நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என இலங்கை மின்சார பொறியியலாளர்கள் சங்கத்தின் தலைவர் சௌமிய

02 ஆம் பக்கத்தில்...

## 3 நாட்களுக்கு மாத்திரமே எரிபொருள் கையிருப்பில்



மூன்று நாட்களுக்கு தேவையான எரிபொருள் மாத்திரமே தற்சமயம் கையிருப்பில் உள்ளதாக மின்சாரத்துறை அமைச்சர் காமினி லொகுகே தெரிவித்துள்ளார்.

மின்சாரத்துறை அமைச்சில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துக் கொண்டு கருத்துரைக்கும் போதெ இவ்வாறு தெரிவித்துள்ளார்.

களனி திஸ்ஸ மின் நிலையத்திற்கு தேவையான 3000 ஆயிரம் மெற்றிக் தொன் உராய்வு எண்ணெயை இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் வழங்கியதை தொடர்ந்து எதிர்வரும் 22 ஆம் திகதி வரை மின்விநியோகத்தை துண்டிக்காமலிருக்க எதிர்பார்த்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

## ஆனந்தசங்கரிக்கு கோரோனா



தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் வீ.ஆனந்தசங்கரிக்கு கொவிட் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

02 ஆம் பக்கத்தில்...

## அடுத்த தேர்தலில் மைத்திரி தலைமையில் சு.க.தனித்து களமிறங்குகின்றது



எதிர்வரும் தேர்தலில் தனிக் கூட்டணியாக போட்டியிடுவதற்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய குழு தீர்மானித்துள்ளது.

இன்று இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உப தலைவர் பேராசிரியர் ரோஹன லக்ஸ்மன் பியதாச இதனை தெரிவித்தார்.

02 ஆம் பக்கத்தில்...

## நாட்டில் பால் மாவுக்கு கடும் நெருக்கடி!

நாட்டில் ஏற்பட்டிருக்கும் இறக்குமதி செய்யப்படும் பால்மாவுக்கான தட்டுப்பாடு அடுத்த மாதம் நடுப்பகுதி வரை தொடரும் சாத்தியம் இருக்கின்றது என பால்மா இறக்குமதியாளர்களின் சங்கம் தெரிவித்துள்ளது.

பால்மா இறக்குமதி செய்வதற்கு தேவையான வங்கி நாணய கடிதம் திறப்பதற்கு

02 ஆம் பக்கத்தில்...

## கிழக்கு பல்கலை. திருமலை வளாகத்தில் 36 பேருக்கு கோரோனா

### பரீட்சைகள் இரண்டு வாரங்களுக்கு ஒத்திவைப்பு

(ரவ்பீக் பாயிஸ் )

கிழக்கு பல்கலைக்கழக திருகோணமலை வளாகத்தில் நடைபெறவிருந்த பரீட்சைகள் இரண்டு வாரங்களுக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக திருகோணமலை வளாகத்தின் பேச்சாளரொருவர் தெரிவித்தார்.

திருகோணமலை வளாகத்தில் குச்சவெளி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தினால் 324 பேருக்கு அண்டிஜன் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. இதில் 36

02 ஆம் பக்கத்தில்...




## நாட்டில் 5 ஆவது கோரோனா அலை உருவாகும் அபாயம்

ஒமிக்ரோன் மாறுபாடு காரணமாக நாட்டில் ஐந்தாவது கொரோனா வைரஸ் அலை உருவாகும் அபாயம் இருப்பதாக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் எச்சரித்துள்ளது.

நீண்ட வார விடுமுறையில் இடம்பெற்ற பொது கூட்டங்கள் மற்றும் ஒன்றுகூடல்கள் காரணமாக அடுத்த இரண்டு வாரங்களில் நாளாந்தம்

02 ஆம் பக்கத்தில்...

## பொரளை தேவாலயத்தில் கைக்குண்டு - விசாரணைகள் முன்னெடுக்கப்படும் விதம் குறித்து அனைத்து புனிதர்களின் திருச்சபை அதிருப்தி!

(காந்தன்)

2022ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 11ஆம் திகதி பொரளையில் உள்ள அனைத்து புனிதர்களின் தேவாலயத்தில் கைக்குண்டு கண்டுபிடிக்கப்பட்ட சம்பவம் தொடர்பான விசாரணைகள் முன்னெடுக்கப்படும் விதம் தொடர்பாக அனைத்து புனிதர்களின் திருச்சபையின் பரிஷ் சபை ஆழ்ந்த அதிருப்தியை வெளியிட்டுள்ளது.

பொரளை ஆனந்த ராஜகருணா மாவத்தையில் அமைந்துள்ள அனைத்து புனிதர்களின் தேவாலயத்தில் கைக்குண்டு வைக்க நடவடிக்கை எடுத்தவர்களின் கோழைத்தனமான மற்றும் பகுத்தறிவற்ற செயல்களை தாம் வன்மையாகக் கண்டிப்பதாக பொரளை அனைத்து புனிதர்களின் ஆலய பரிஷ் சபை விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. குறித்த அறிக்கையில் மேலும்

02 ஆம் பக்கத்தில்...


MATHE BILDUNGSZENTRUM
கணித கற்கைநெறி மையம்
MBZ
கல்வியே துணை
பள்ளித் தலைமைத்தும் பேரெடுக்கும் பிள்ளைகள்.
அள்ளிப் பெற்றுவரும் நிறைவான புள்ளிகள்!
உள்ளதை சொல்வதெனில் எங்ஙனம் சாத்தியம்..
எள்ளளவும் பொய்யில்லை எட்டிவந்து பாரும்!!
- MATHE BILDUNGSZENTRUM
Mathe மகேந்திரா-வின் தெளிவான கற்பித்தலில் திருப்தியுறும் பெற்றோர்கள்.
S.MAHENDIRAN
076 431 83 79
mbz.mahe@gmail.com
MATHE மட்டுமல்ல
Deutsch, Französisch, Englisch, Gymi Prüfung
BMS, HMS, FMS, Gymi Probe
அத்தனைக்கும் கீழ்காணும் இடங்களில்
Oerlikon, Uster, Schaffhausen



"சுவிஸ் மக்களின் நம்பிக்கையான காப்புறுதிகளுக்கும், ஓய்வுகாலத் திட்டமிடலுக்கும் நிபுணத்துவ வழிகாட்டி கல்லாறு சதீஷ்"
aaDaa Finance 0798000100
Aadaa Finance GmbH
Dr.(h.c) Nageswaran Arulrasa D.Litt
CEO
Eidgenössische Finanzmarktaufsicht Nr:35302
Fachmann für versicherung & vorsorge
Hauptstrasse 54
6015 Luzern
Switzerland
079 8000 100
arulnages@yahoo.com
finma 34598
25605: cicero




## நாட்டின் மிக முக்கிய வைரஸாக மாறுகின்றது ஒமிக்ரோன்

(ஊர்காவலன்)

டெல்டாவை முந்திக்கொண்டு ஒமிக்ரோன் திரிபு வேகமாக பரவும் நிலை காணப்படுவதால் இலங்கையின் முக்கிய வைரஸாக ஒமிக்ரோன் வைரஸை தற்போது குறிப்பிடமுடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீட ஒவ்வாமை, மூலக்கூற்று நுண்ணுயிர் பிரிவின் தலைவரான கலாநிதி சந்திம ஜீவந்தர இந்த விடயத்தினைத் தெரிவித்துள்ளார்.

நாட்டில் இதுவரை 208 ஒமிக்ரோன் தொற்று நோயாளிகள்

02 ஆம் பக்கத்தில்...

# சுவாமி விவேகானந்தரின் வரலாற்றுச் சிறப்புமிக்க இலங்கை விஜயத்தின் 125ஆவது ஆண்டு ஓராண்டு தொடர் விழா ஆரம்பம்! கல்லடி சுவாமி விபுலாநந்த மணி மண்டபத்தில் துவக்கவிழா!





( வி.ரி.சகாதேவராஜா)

வீரத்துறவி சுவாமி விவேகானந்தரின் வரலாற்றுச் சிறப்புமிக்க இலங்கை விஜயத்தின் 125ஆவது ஆண்டு ஓராண்டு தொடர் விழாவின் துவக்கவிழா நேற்று(17)திங்கட்கிழமை இ.கி.மிசன் ஏற்பாட்டில் கல்லடி சுவாமி விபுலாநந்தமணிமண்டபத்தில் நடைபெற்றது.

உலகளாவியரீதியில் ஜீவசேவையாற்றிவரும் ஸ்ரீ ராமகிருஸ்ண மிசனை ஸ்தாபித்த வீரத்துறவி வங்கத்தின்சிங்கம் சுவாமி விவேகானந்தர் இலங்கைத் திருநாட்டிற்கு வருகை தந்து (15.01.2022) 125ஆண்டுகளாகின்றன.

சுவாமி விவேகானந்தர் 1897ம் ஆண்டு ஜனவரி 15ந்திகதி வருகை தந்திருந்தார். அவர் இலங்கையில் கொழும்பு யாழ்ப்பாணம் கண்டி அனுராதபுரம் மாத்தளை போன்ற நகரங்களுக்கு விஜயம் செய்து 11 நாட்கள் தங்கியிருந்து ஆண்மிகஒளியேற்றினார்.

அவரது அந்த வரலாற்றுரீதியான விஜயத்திற்கு 125ஆண்டுகளாகின்றது. அதனையொட்டி இலங்கை இராமகிருஸ்ணமிஷன் கொழும்பு தொடக்கம் மட்டக்களப்பு காரைதீவு ஈறாக பல இடங்களில் நினைவுதின விழாக்களை ஏற்பாடுசெய்துள்ளது.

இவ்விழாக்களுடன் ஓராண்டு காலத்திற்கு அதாவது அடுத்த ஆண்டு(2023) ஜனவரி மாதம் 15ஆம் திகதி வரை பலவித நிகழ்ச்சிகளை கிரமமாக நடாத்த திட்டமிடப்பட்டுள்ளது.

**துவக்கவிழா!**

அந்த அடிப்படையில், நேற்றுகாலை 9.30மணிக்கு ஆரம்பமான முதல்விழாவில் மட்டு.இ.கி.மிசன் துணைமேலாளர் ஸ்ரீமத் சுவாமி நீலமாதவானந்தஜீ மஹராஜ்ஜின் வரவேற்புரையுடன் நிகழ்வுகள் ஆரம்பமாகின.

பிரதமஅதிதியாக கிழக்குமாகாண விவசாய அமைச்சின் செயலாளர் திருமதி கலாமதி பத்மராஜா கலந்துசிறப்பிக்க, சிறப்புரையை மட்டு.மாநகர முதல்வர் தி.சரவணபவன் நிகழ்த்தினார்.

விசேட சிறப்புப்பேருரையை யாழ்.தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கா தேவஸ்தான தலைவர் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் நிகழ்த்தினார்.

பல்வேறுபட்டகலைநிகழ்ச்சிகள் மேடையேறிய அதேதருணம் கோப்பாய் ஸ்ரீசுப்பிரமணியகோட்டத்தலைவர் ஆன்மீகச்சுடர் ரிஷி தொண்டுநாதன் சுவாமிகள் சொற்பொழிவாற்றினார்..

மட்டு.இ.கி.மிசன் மேலாளர் ஸ்ரீமத் சுவாமி தக்ஷஜானந்த ஜீ மஹராஜ்ஜின் நன்றியுடன் கூடிய நிறைவுரை இடம்பெற்றது.

நேற்றுமுன்தினம்(16)கொழும்பில் குறித்த விழாவின் தேசிய துவக்கவிழா இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்கள ஏற்பாட்டில் நடைபெற்றமை தெரிந்ததே.

# புண்ணியம் தரும் தைப்பூசம் இன்று!



(காரைதீவு நிருபர்
வி.ரி.சகாதேவராஜா)

தைப்பூசம் மிகவும் சுபிட்சமான நாள் என்பது நம்பிக்கை. எனவே அன்று தொடங்கும் நல்ல காரியங்கள் எதுவானாலும் சிறந்த பலனைக் கொடுக்கும் என்பது தொன்றுதொட்ட நம்பிக்கை.

புண்ணியம் தரும் தைப்பூசம். இன்று(18 )செவ்வாய்க்கிழமை ஆகும். இந்துக்கள் அறிந்துகொள்ள வேண்டிய தைப்பூசத் திருவிழாவின் மகத்துவங்கள்.

முருகன் வழிபாடு தமிழ்ச்சமூகத்தின் தொன்மையானவழிபாடு. சங்க இலக்கியத்திலே முருகன் வழிபாடு பற்றிய தகவல்கள் காணப்படுகின்றன.

தொன்றுதொட்டு பூசத் திருநாளில் முருகப்பெருமானை வழிபடும் வழக்கம் இருந்து வந்துள்ளது. பூச நாளில் 'வேலன் வெறியாட்டு' என்ற முருக வழிபாடு ஆண்இபெண் என்ற இருபாலரும் வேல் பிடித்து ஆடிய செய்திகளை சங்கத் தமிழ் தகவல்கள் கூறுகின்றன. அத்தகைய பழந்தமிழ்த் திருவிழாவான தைப்பூசத்தின் மகத்துவங்கள் குறித்த இங்கு தியானிப்போம்.

பூச நன்னாளில் கோயிலுக்குச் செல்ல முடியாதவர்கள் வீட்டிலேயே உபவாசம் இருந்து முருகப்பெருமானை வழிபடலாம். முருகனின் புகழ் பாடும் பாடல்களை அன்று முழுவதும் பாடுவது சிறந்த பலன்களை அளிக்கும்.

தைப்பூச நன்னாளில் வேல் வழிபாடு செய்வது மிகுந்த நன்மைகளை அளிக்கும் என்பார்கள். வீட்டில் வேல் வைத்து வழிபாடு செய்பவர்கள் பூச நாளில் மகா ருத்ர அபிஷேகம் செய்வது சிறந்தது.

தைப்பூச நன்னாளில் திருப்புகழ் மகா மந்திரபூஜை மகாஸ்கந்த ஹோமம் போன்றவற்றை செய்வதும் கலந்து கொள்வதும் மன விருப்பங்களை நிறைவேற்ற உதவும் மகா மருந்துகள் ஆகும் என்பது ஆன்றோர் வாக்கு.

# நாட்டில் பால் மாவுக்கு கடும் நெருக்கடி!

டொலர் பற்றாக்குறையாக இருப்பதே இதற்கு காரணம் எனவும் சங்கத்தின் பேச்சாளர் ஒருவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்துடன் இலங்கையில் மாதம் ஒன்றுக்கு 6 ஆயிரம் முதல் 7 ஆயிரம் டொன் பால்மா தேவையாகின்றது. அதற்காக 30 மில்லியன் டொலர் தேவையாகின்றது.

சாதாரணமாக வாரத்துக்கு ஒருமுறை பால்மா அடங்கிய கப்பல் ஒன்று நாட்டுக்கு வருகின்றது. தற்போதைய நிலைமையில் பால்மா அடங்கிய கப்பல் ஒன்று வர இருப்பது இந்த மாதம் இறுதி இரண்டு வாரங்களுக்குள்ளாகும்.

அவ்வாறு பால்மா அடங்கி கப்பல் வந்தாலும் தற்போது பால்மாவுக்கு இருக்கும் பற்றாக்குறை தீரப்போவதில்லை எனவும் சங்கத்தின் பேச்சாளர் குறிப்பிட்டார்.

# ஆனந்தசங்கரிக்கு கொரோனா

உடல் சுகவீனம் காரணமாக வீ.ஆனந்தசங்கரிக்கு என்டிஜன் பரிசோதனை நேற்று முன்தினம் மேற்கொள்ளப்பட்டதில் கொவிட் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்த நிலையில் பிசிஆர் பிரிசோதனையும் நேற்று முன்தினம் முன்னெடுக்கப்பட்டிருந்தது. குறித்த பரிசோதனையிலும் கொவிட் தொற்று உறுதி செய்யப்பட்டிருந்ததாக அவரது உறவினர்கள் தெரிவித்துள்ளனர். இதனை அடுத்து யாழ்ப்பாணத்தில் உள்ள தமிழர் விடுதலைக் கூட்டணி அலுவலகம் சுகாதார பிரிவினரால் தனிமைப்படுத்தப்பட்டுள்ளது. இதேவேளை அவரது குடும்ப உறுப்பினர்கள் மற்றும் இரண்டு மெய் பாதுகாவலர்கள், சாரதி உள்ளிட்டவர்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

வீ.ஆனந்தசங்கரியின் உடல்நிலையில் எவ்வித பாதிப்பும் இல்லை எனவும், அவரது வயதினை கருத்தில் கொண்டு வைத்தியசாலை ஒன்றில் தங்கவைக்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டு வருவதாக அவரது குடும்ப உறுப்பினர்கள் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# நாட்டில் 5 ஆவது கொரோனா அலை உருவாகும் அபாயம்

பதிவாகும் நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரிக்கும் என்றும் அச்சங்கம் கூறியுள்ளது.

ஒமிக்ரோன் மாறுபாடு காரணமாக உலகம் முழுவதும் குறிப்பாக அமெரிக்கா, பிரித்தானியா மற்றும் கனடாவில் நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதை சுட்டிக்காட்டியே வைத்தியர் பிரசாத் ரணவீர இதனை குறிப்பிட்டார்.

ஓமிக்ரான் மாறுபாட்டின் அதிக பரவல் தன்மை காரணமாக இலங்கையிலும் தொற்று நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரிக்க வாய்ப்புள்ளது என வைத்தியர் பிரசாத் ரணவீர தெரிவித்தார். இருப்பினும் தடுப்பூசி நடவடிக்கை காரணமாக இலங்கையில் கொரோனா தொற்று மரணங்கள் குறைந்துள்ளதாக தெரிவித்த வைத்தியர், அனைவரும் தடுப்பூசியை செலுத்த வேண்டிய அவசியத்தையும் சுட்டிக்காட்டினார்.

# பொரளை தேவாலயத்தில் கைக்குண்டு -

தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, 18ஆம் நூற்றாண்டிலிருந்து ஏராளமான மக்கள் வழிபட்டு, ஆறுதலும் அமைதியும் கண்ட இது போன்ற வழிபாட்டுத் தலங்களில் செய்யப்படும் இந்தச் செயல்கள், அவர்களின் பரிஷ் சமூகத்தின் உறுப்பினர்களின் அடிப்படை உரிமைகளை மீறுவதாகவும், தேசியத்தின் வேர்களையே பாதிக்கும்.

சிசிடிவி காட்சிகளைப் பார்ப்பதற்கு முன்னதாகவே சந்தேக நபர்களைக் கைது செய்து, பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்திய பொலிஸ் அனைத்து சிசிடிவி காட்சிகளையும் சரியாகக் கவனத்தில்கொள்ளாமல் நடந்து கொண்ட விதம் குறித்து ஆல் செயின்ட்ஸ் சர்ச்சின் பரிஷ் சபை கவலை கொண்டுள்ளது.

சம்பவத்தன்று பிற்பகல் 3:00 மணிக்குப் பின்னரே சிசிடிவி காட்சிகளை பொலிஸ் கோரியது ஏன்? இந்த பின்னணியில் ஒரு பெரிய மர்மம் உள்ளது. மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை மிகவும் பொருத்தமான ஆதாரங்களை வலியுறுத்தினார். சம்பவம் நடந்த அன்று காலை சிசிடிவி காட்சிகளை பார்க்கும் போது இந்த சம்பவம் தொடர்பான தகவல்கள் வெளியாகின.

இந்த விஷயங்களை மிகவும் தீவிரமாக எடுத்துக் கொள்ளுமாறும், இந்த விசாரணைகளை அனைத்து நியாயமான திறமை, கவனிப்பு மற்றும் உரிய விடாமுயற்சியுடன் கையாளுமாறு சம்பந்தப்பட்ட அனைத்து அதிகாரிகளிடமும் அரசாங்கத்திடமும் மிகவும் உறுதியாகக் கேட்டுக்கொள்கிறோம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.




# சாதனை படைத்த மாணவிக்கு பாராட்டு



(ரக்ஸனா)

மட்.நாவற்காடு கிராமத்தினை சேர்ந்த ம.மமே.நாவற்காடு நாமகள் தேசிய பாடசாலையில் உயர்தரத்தில் கற்கின்ற மாணவி சுரேஸ் மயூரா அவர்கள் கிழக்கு மாகாண மட்டத்தில் குண்டு போடுதலில் முதலாம் இடமும், பருதி வட்டம் வீசுதலில் மூன்றாம் இடத்தினையும் பெற்று, இளைஞர் கழக ரீதியில் தேசிய மட்டத்தில் நான்காம் இடத்தினை பெற்று பாடசாலைக்கும், கிராமத்திற்கும், பிரதேசத்திற்கும் புகழை பெற்றுக் கொடுத்துள்ளனர்.

இவரின் இந்த சாதனையை நிலை நாட்டிய மாணவி சுரேஸ் மயூரா, மற்றும் அவரை நெறிப்படுத்திய உடற்கல்வி ஆசிரியர் சுபாஸ், பயிற்றுவிப்பாளர் அவர்களுக்கும், அக்னிச் சிறகுகள் பேரவையின் ஆரம்பகால உறுப்பினர் ச.விஜேந்திரன் நிதி அனுசரணையில் வியாழக்கிழமை(13) ம.மமே.நாவற்காடு நாமகள் வித்தியாலயத்தில் அக்னிச் சிறகுகள் பேரவையால் பாராட்டி வாழ்த்தி பொன்னாடை போர்த்தி நினைவுச் சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டனர். இந்நிகழ்வு பாடசாலையின் முதல்வார் இ.தியாகரெத்தினம், உப அதிபர், க,திருச்செல்வம், ஆசிரியர்கள், மாணவர்கள் முன்னிலையில் அக்னிச் சிறகுகள் பேரவை தலைமை ஒருங்கிணைப்பாளர் ஜெயக்கொடி, ஆலோசகர் மு.ரெத்தினதுரை ஆகியோரால் வழங்கி வைக்கப்பட்டனர்.

# நாட்டின் மிக முக்கிய வைரஸாக மாறுகின்றது

இனங்காணப்பட்டுள்ள நிலையிலேயே அவர் இந்த விடயத்தினைக் குறிப்பிட்டுள்ளார்.

புதிதாக இனங்காணப்பட்டுள்ள ஒமிக்ரோன் வைரஸ் தொற்றுநோயாளர்களில் பெரும்பாலானோர் கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து வெளிநாடுகளுக்கு செல்வதற்காக வந்திருந்தவர்கள் என அவர் தெரிவித்துள்ளார்.

குறித்த அனைவரும், கொழும்பு, கம்பஹா, காலி, மாத்தறை, திருகோணமலை ஆகிய மாவட்டங்களை வதிவிடமாகக் கொண்டவர்கள் என்பதையும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# கிழக்கு பல்கலை. திருமலை வளாகத்தில் 36

பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும்,வளாகத்தில் தங்கியிருந்த மாணவர்களுக்கு அதிக அளவில் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும் அம்மாணவர்கள் அதே விடுதியில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளதாகவும் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் தெரிவித்துள்ளது.

இருந்த போதிலும் குறித்த மாணவர்களுக்கு பரீட்சைகள் இடம்பெற இருந்த நிலையில் பரீட்சைகள் நடாத்துவது குறித்து சுகாதார ஆலோசனைகளை வழங்கி உள்ளதாகவும் குச்சவெளி பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தின் பேச்சாளரொருவர் குறிப்பிட்டார்.

# அடுத்த தேர்தலில் மைத்திரி தலைமையில்

5,000 மேலதிக கொடுப்பனவை வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளபோதும் மக்கள் தொகையில் 7 விகிதமானோர் மட்டுமே அரசுத்துறை ஊழியர்கள் என சுட்டிக்காட்டினார்.

மேலும் அரசாங்கம் தொடர்ந்து அச்சிட்டே 5,000 ரூபாயை வழங்குகின்றது என்றும் ரோஹன லக்ஸ்மன் பியதாச குற்றம் சாட்டினார். அதிகரித்து வரும் பொருட்களின் விலையால் மக்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது என்றும் 650,000 பேர் இரவு உணவை உட்கொள்வதில்லை என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

இந்த சூழ்நிலையில் பொதுமக்கள் சுதந்திரக் கட்சியிடம் தீர்வை எதிர்பார்த்து வருவதாகவும் அதற்காக கட்சி நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகவும் அவர் கூறினார்.

# நாடு முழுவதும் 2 மணி நேர மின் வெட்டு?

இல்லை என அவர் குறிப்பிட்டுள்ளார். தற்போது கையிருப்பில் உள்ள எரிபொருளை மின் உற்பத்தி நிலையங்களுக்கு வழங்கினால், வாகனங்களுக்கான எரிபொருளுக்கு தட்டுப்பாடு ஏற்படும் என அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

எரிபொருள் இல்லாவிட்டால் இரண்டு மணித்தியாலங்களுக்கு மின்சாரத்தை துண்டித்து நிலைமையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவது சாத்தியமென்றும், வாகன சாரதிகளால் அவ்வாறான நடவடிக்கையை மேற்கொள்ள முடியாது என்றும் வலுசக்தி அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# மின்சார பொறியியலாளர்கள் இன்று

குமாரவடு எச்சரிக்கை விடுத்திருந்தார்.

எனினும் இது வரையில் கோரிக்கை நிறைவேற்றப்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் இலங்கை மின்சார சபையின் புதிய பொதுமுகாமையாளருக்கு எதிர்ப்பு தெரிவித்து நாளை சுகயீன விடுமுறையில் ஈடுபட தீர்மானித்துள்ளதாக மின்சார பொறியியலாளர்கள் சங்கம் அறிவித்துள்ளது.

இலங்கை மின்சார சபையின் புதிய பொதுமுகாமையாளர் பதவிக்கு கடந்த 14ஆம் திகதி புதிய நபர் ஒருவர் நியமிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# வாகரை குஞ்சங்கல் குளத்தில் ஆதிவாசிகளின் பொங்கல் விழா








(க.ருத்திரன்)

ஆதிவாசிகளின் பொங்கல் விழா வாகரை குஞ்சங் கல் குளத்தில் அவர்களுக்குரிய கலாச்சார நிகழ்வுகளுடன் ஞாயிற்றுகிழமை நடைபெற்றது.

ஆதிவாசிகளின் தலைவர் நல்ல தம்பி வேலாயுதம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதேச மக்கள் பங்கு கொண்டு தங்களது கலாச்சார ரீதியில் மண் பானையில் பொங்கல் இட்டு சூரிய பகவானுக்கு நன்றி தெரிவித்தனர்.

இதன்போது சிறுவர்கள் மற்றும் பொற்றோர்களுக்கான மரபு ரீதியான விளையாட்டு நிகழ்வுகளும் நடைபெற்று போட்டி நிகழ்சிகளில் பங்கு கொண்டு வெற்றி பொற்வர்களுக்கு பரிசுப் பொருட்களும் வழங்கி வைக்கப்பட்டது.

நீண்ட காலத்திற்குப் பின்னர் மேற்படி கிரா மக்கள் இவ் பொங்கல் விழாவினை மகிழ்சியுடன் கொண்டாடினார்கள். குறித்த நிகழ்வினை லவன் உதவும் கரங்கள் நற்பணி மண்றத்தினர் ஏற்பாடு செய்திருந்தனர்.

இந் நிகழ்வில் கலந்து கொண்ட அமைப்பின் தலைவர் குருசுமுத்து வி.லவன் உரையாற்றும் போது தெரிவித்ததாவது ஆதிவாசிகள் எமது இனத்தின் மூத்த தமிழ் குடிமக்களாகும். இப் பகுதிகளில் இருந்து 3000 வருடங்களுக்கு முன்பு மன்னர்காலத்தின் அரசபடைகளில் போர் வீராகளாக இருந்துள்ளனர். அப்போது அவர்களுக்கு கிடைத்த பரிசுப் பொருட்களை அவர்களின் மரணத்திற்கு பின்னர் மரணித்த போர்வீரர்களது உடலுடன் முதுமக்கள்காழிகளாகவும் ,நடுகைகற்கள்; பண்பாடுகளாகவும் இன்று கூறப்படும் தொல் பொருட்களாகவும் இறுதி எச்சங்களாகும் இன்று கானப்படுகிறது. எனவே இவர்கள் எம்மவர்களால் போறறப்படவேண்டும் இவர்களது காலச்சாரங்களும் பண்பாடுகளும் எம்மால் பாதுகாக்கப்படவேண்டும் என்றார்.

# வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் அதிதீவிர சிகிச்சை மற்றும் எக்ஸ்ரே பிரிவு திறப்பு





(ந.குகதர்சன் )

வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் அதிதீவிர சிகிச்சை பிரிவு மற்றும் எக்ஸ்ரே பிரிவு என்பன ஞாயிற்றுக்கிழமை (2022.01.16) திறந்து வைக்கப்பட்டது.

வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையின் வைத்தியட்சகர் திருமதி. தயாழினி சசிகுமார்தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் சுகாதார அமைச்சின் பொதுச் சுகாதார பணிப்பாளர் வைத்தியர் அசேல குணவர்த்தன பிரதம அதிதியாக கலந்து கொண்டு திறந்து வைத்தார்.

மேலும் அதிதிகளாக கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ஏ.ஆர்.எம்.தௌபீக், மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் என்.மயூரன், சுகாதார சேவைகள் திணைக்கள உயர் அதிகாரிகள், சுகாதார வைத்திய அதிகாரிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

இதன் போது வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் இயங்கும் கொரோனா சிகிச்சை நிலையம், தீவிர சிகிச்சைபிரிவு, மனநோயாளர்கள்சிகிச்சை பிரிவு என்பவற்றினை சுகாதார அமைச்சின் பொதுச் சுகாதார பணிப்பாளர் வைத்தியர் அசேல குணவர்த்தன பார்வையிட்டார்.

வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் அதிதீவிர சிகிச்சை பிரிவு மற்றும் எக்ஸ்ரே பிரிவு என்பன மலேசியா அலகா பௌண்டேசன், எமது சமூகம் நிறுவனம், அவுஸ்டரேலியா மெடிக்கல் எய்ட் பௌண்டேசன் மற்றும் சுகாதார அமைச்சு ஆகியவற்றின் நிதிப்பங்களிப்பில் திறந்து வைக்கப்பட்டதாக வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையின் வைத்தியட்சகர் திருமதி.தயாழினி சசிகுமார் தெரிவித்தார்.

# தம்பலகாமத்தில் 18 பயனாளிகளுக்கு 64 இலட்சம் ரூபா பெறுமதியான உபகரணங்கள் வழங்கி வைப்பு





(ஹஸ்பர்)

ஜனாதிபதியின் சுபீட்சத்தின் நோக்கு கொள்கை பிரகடனத்துக்கு அமைய வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் தம்பலகாமம் பிரதேச செயலகப் பிரிவில் தெரிவு செய்யப்பட்ட சமுர்த்தி பயனாளிகளுக்கான வாழ்வாதார உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

தம்பலகாமம் பிரதேச செயலாளர் ஜெயகௌரி ஸ்ரீபதி தலைமையில் (16) பிரதேச செயலக மண்டபத்தில் இடம் பெற்ற நிகழ்வில் பிரதம அதிதியாக திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு இணைத் தலைவருமானகபில நுவன் அத்துகோரளகலந்து கொண்டு வாழ்வாதார உபகரணங்களை பயனாளிகளிடம் கையளித்தார்.

சௌபாக்கியா நான்காம் வாரத்தினை முன்னிட்டு சமுர்த்தி வாழ்வாதார அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் மொத்தமாக 64 இலட்சம் ரூபா பெறுமதியான 18 பயனாளிகளுக்கு தையல் இயந்திரம், நீர் இறைக்கும் பம்பி போன்ற உபகரணங்கள் இதன் போது வழங்கி வைக்கப்பட்டன.

இந் நிகழ்வில் தம்பலகாமம் உதவி பிரதேச செயலாளர் இரா.பிரசாந்தன், சமுர்த்தி தலைமை முகாமையாளர் சித்திக், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், பயனாளிகள் என பலரும் கலந்து கொண்டனர்.

# நாட்டின் பொருளாதாரத்தை மீட்டெடுக்க கணனிக் கல்வி அவசியம்

(த.சுபேசன்)



நாட்டின் பொருளாதாரத்தை மீட்டெடுக்க பாடசாலைகளில் கணணிக் கல்வி மற்றும் டிஜிட்டல் புரட்சி என்பன மிக அவசியமானது என எதிர்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.அண்மையில் தென்மராட்சி பிரதேசத்திற்கு விஜயம் மேற்கொண்டு கருத்துத் தெரிவித்த போதே அவர் இதனைத் தெரிவித்திருந்தார்.இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்;

கொவிட் 19 கால கட்டத்தில் மக்கள் பல்வேறு பிரச்சனைகளுக்கு முகம்கொடுத்திருந்தனர். அப்போது ஐக்கிய மக்கள் சக்தி எதிர்கட்சியில் பிரதான கட்சியாக 'மூச்சு' செயற்திட்டத்தை ஆரம்பித்து பாராளுமன்ற உறுப்பினர்கள்,அமைப்பாளர்கள்,தனிப்பட்ட நலன்விரும்பிகளின் நிதி உதவி மூலம் அரசாங்க வைத்தியசாலைகளை அபிவிருத்தி செய்து வருகிறோம்.கடந்த 2021 ஏப்ரல் 25ம் தேதி முதலாவதாக முல்லேரியாவைத்தியசாலையில் மூச்சு செயற்திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.அந்தவகையில் எம்மால் இதுவரை 40வைத்தியசாலைகளுக்கு 115.2 மில்லியன் ரூபாய் ஒதுக்கீட்டில் உதவித்திட்டங்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன. எந்தவொரு அரச நிதியும் இன்றி எதிர்கட்சியாக இந்த உதவித்திட்டங்களைவழங்கிவருவது முக்கியத்துவமான விடயம். ஐக்கிய மக்கள்சக்தி ஆரோக்கியம் மட்டுமன்றி கல்வி நடவடிக்கைகளுக்கும் முக்கியத்துவம் கொடுத்து வருகிறது.நாட்டின் பொருளாதாரத்தை மீட்டெடுக்க கணிணிக் கல்வி மற்றும் டிஜிட்டல் புரட்சி ஆகியன அவசியம். எமது செயற்திட்டம் ஊடாக மொனராகல மாவட்டத்தில் முதலாவது கணணிக் கல்வி ஊக்குவிப்பு செயற்திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.அதன் பின்னர் திருகோணமலை, மன்னார்,கிளிநொச்சி,முல்லைத்தீவு மற்றும் யாழ்ப்பாண மாவட்ட பாடசாலைகள் சிலவற்றில் கணணிக் கல்வி ஊக்குவிப்பு செயற்திட்டம் எம்மால் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.ஒரு பாடசாலைக்கு ஏழரை இலட்சம் ரூபாய் பெறுமதியான இலத்திரனியல் பொருட்கள் இந்த செயற்திட்டம் ஊடாக வழங்கி வைக்கப்படுகிறது. எதிர்வரும் காலத்தில் ஏனைய கிராமநகர பாடசாலைகளுக்கும் இந்த கணணி கல்வி ஊக்குவிப்பு உதவித்திட்டங்களை வழங்க எதிர்பார்த்துள்ளோம்.அதேவேளையில் மருத்துவ ரீதியான உபகரணங்களையும் கிராம மற்றும் பிரதேச மட்ட வைத்தியசாலைகளுக்கு வழங்க எதிர்பார்த்துள்ளோம்.அதுமாத்திரமன்றி பின்தங்கிய பாடசாலைகளில் ஆங்கில கல்வியை மேம்படுத்தும் பொருட்டு சர்வதேசரீதியாக அங்கீகரிக்கப்பட்ட இலவச ஆங்கில மொழிப் பயிற்சியை ஆரம்பிக்க எண்ணியுள்ளோம்.இவ்வாறான செயற்திட்டங்கள் ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் நீங்கள் வழங்கிய ஆதரவிற்கு நான் வழங்கும் மிகப்பெரிய கௌரவம் ஆகும். என மேலும் தெரிவித்திருந்தார்.

# சம்புநகர் அல்மினா வித்தியாலய அபிவிருத்திக்கு முாரப் எம்.பி. நிதி





அட்டாளைச்சேனை சம்பு நகர் அல்மினா வித்தியாலயத்திற்கு திகாமடுல்ல மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எஸ்.எம்.எம்.முஷாரப் ஞாயிறு (16.01.2022) பாடசாலைச் சமூகத்தின் அழைப்பின் பேரில் விஜயம் செய்தார்.

பாடசாலையின் அதிபர் எம்.ஐ. முகம்மட் றியாஸ் தலைமையில் இந்நிகழ்வு நடைபெற்றது.

இதன்போது பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.எம்.முஷாரப் பாடசாலையின் தற்போதைய தேவைகள் பற்றி பாடசாலை சமூகத்தவர்களிடம் கலந்துரையாடி பின்னர் பாடசாலையின் நீண்ட கால தேவையாகவுள்ள சுற்றுமதில் அமைப்பதற்காக 15 இலட்சம் ரூபாவிற்கான மதிப்பீட்டு அறிக்கையை உடன் சமர்ப்பிக்குமாறு கேட்டதுடன்தளபாடத் தேவையை நிவர்த்தி செய்வதற்காக இவ்வாண்டுக்கான பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்ட நிதி ஒதுக்கீட்டின் மூலம் ஓர் இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யவுள்ளதாகவும் இதன் போது தெரிவித்தார்.

பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.எம்.முஷாரபின் சமூகத்தை நோக்கிய மக்கள்பணியைப் பாராட்டி பாடசாலை சமூகத்தால் பொன்னாடை போர்த்தியும் நினைவுச் சின்னம் வழங்கியும் இதன் போது கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் அக்கரைப்பற்று கல்வி வலயத்தின் சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் எஸ்.எல். மன்சூர், பாராளுமன்ற உறுப்பினரின் இணைப்பாளர் எஸ்.எம்.அறூஸ், ஓய்வு பெற்ற ஆசிரியர் ஏ.எம்.சம்சுதீன், ஜு்ம்ஆப் பள்ளிவாசல் நிருவாக உறுப்பினர் யூ.கே.ஜு்னைட், பாடசாலை அபிவிருத்திச் சங்க செயலாளர் ஏ.எல்.எம்.அக்ரம், பிரதி அதிபர்எம்.எச்.அப்துல் ஹை, வலயத்தலைவர் ஏ.சீ.எம்.பர்சான், அபிவிருத்தி உத்தியோகத்தர்களான ஏ.எல்.கியாஸ்தீன், . ஏ.ஜீ.ஹம்சார் உட்பட பாராளுமன்ற உறுப்பினரின் உத்தியோகத்தர்கள், பாடசாலை சமூகத்தவர்கள், பெற்றோர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# மன்னாரில் சமூக மோதலுக்கான முன் எச்சரிக்கை மற்றும் தயார் நிலை பற்றிய ஒரு நாள் பயிற்சி கருத்தமர்வு





( வாஸ் கூஞ்ஞ)

தற்பொழுது பரவலாக நிலவிவரும் சமூக மோதல்கள் தொடர்ந்து ஏற்படா வண்ணம் இது தொடர்பாக இலங்கை சமாதான பேரவை மற்றும் மன்னார் பிரதேச சர்வ மதக் குழுக்கள் ஆகியவற்றின் அனுசரனையுடன் மன்னாரில் 'சமூக மோதலுக்கான முன் எச்சரிக்கை மற்றும் தயார் நிலை' பற்றிய ஒரு நாள் பயிற்சி கருத்தமர்வு இடம்பெற்றது.

கடந்த வியாழக்கிழமை (13.01.2022) இடம்பெற்ற இவ் பயிற்சி அமர்வில் சர்வ மதத் தலைவர்கள், கிராம அலுவலர்கள், சிவில் அமைப்பினர். பொலிஸ் பிரிவினர், அரசு சார்பற்ற நிறுவன பிரதிநிதிகள் மற்றும் ஊடகவியலாளர்கள் என 29 நபர்கள் இதில் கலந்து கொண்டனர்.

இதன் வளவாளராக இலங்கை சமாதான பேரவையின் நிர்வாக ஆலோகசரும் பயிற்சியாளருமான ஜே.பெனடிற், தேசிய சமாதான பேரவை திட்ட அலுவலர் அ.மெடோசன் பெரேரா, மன்னார் பிரதேச சர்வ மதக் குழுக்கள் திட்ட இணைப்பாளர் ஏ.ஜோன்சன் ஆகியோர் கலந்து கொண்டனர். இவ் பயிற்சி வகுப்பில் குறிப்பாக சகவாழ்வுக்கான முறைமை வெளிநாடுகளில் காணப்படுகின்ற போதும் நமது இலங்கை நாட்டில் இது எவ்வாறு அமைந்துள்ளது எனவும், சர்வ மதக் குழுக்களில் இருப்பவர்கள் நிச்சயம் ஒரு சார்பாக செயல்படக் கூடாது எனவும், இரு பகுதினர் மட்டில் ஏற்படும் பிரச்சனையானது தீர்க்கப்படாது இருக்குமாகில் அது காலபோக்கில் வன் செயலாக மாறும் எனவும் ஆகவே இவற்றை தடுத்து நிறுத்த முன் ஆய்த்தமாக செயல்பட வேண்டும் என்றும், எந்த விடயமாக இருந்தாலும் சரியான முறையில் பகுப்பாய்வு செய்யப்பட வேண்டும். அன்றேல் அது பல பிரச்சனைகளுக்கு வழி சமைத்துவிடும் என்ற இவ்வாறு பல கோணத்தில் ஆய்வு செய்யப்பட்டு தெளிவு படுத்தப்பட்டது என்பதும் குறிப்பிடத்தக்கது.

## கல்முனை தமிழ் இளைஞர் சேனை அமைப்பின் ஏற்பாட்டில்

# பிரதான தைப்பொங்கல் நிகழ்வு






















(ஏ.எல்.எம்.ஷினாஸ்)

இந்து மக்கள் மாத்திரமல்லாது மாவட்டத்தின் அனைத்து மக்களும் ஒன்றிணைந்து கொண்டாடும் விழாவாக தைப்பொங்கல் விழா காணப்படுகின்றது. மதங்கள், இனங்கள் வேறாக இருந்தாலும் நாட்டை கட்டியெழுப்ப நாம் எல்லோரும் ஒரே மக்களாக செயற்பட வேண்டும் என்று அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் ஜெ.எம்.ஏ.டக்ளஸ் கல்முனையில் தெரிவித்தர்.

அம்பாறை மாவட்டத்தின் பிரதான தைப்பொங்கல் நிகழ்வு கல்முனை தமிழ் இளைஞர் சேனை அமைப்பின் ஏற்பாட்டில் கல்முனை பழைய பஸ் நிலையத்திற்கு முன்னால் (14) நடைபெற்றது.

இதில் மாவட்ட அரசாங்க அதிபர் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார் தொடர்ந்து உரையாற்றுகையில், பெண்கள் சாரி அணிவதும், பொட்டு வைப்பதும் இந்தியாவிலிருந்து நாம் பின்பற்றிய கலாச்சாரமாகும். நான் ஒரு பௌத்தராக இருந்த போதிலும் தமிழர்களின் தைப்பொங்கலை கொண்டாடுகிறேன். ஏனைய சிங்கள மக்களும் இதனை கொண்டாடுகின்றனர்.

பொங்கல் பானையில் தானியம் உட்பட ஏனைய பொருட்கள் அனைத்தையும் ஒன்று சேர்க்கும் போதே சுவை வருகிறது. அது போன்று எல்லா மதங்களும், இனங்களும் தங்களது கலாச்சார, பண்பாட்டு விடயங்களை சேர்க்கும் போதே சுவையான சூழல் உருவாகிறது.

அம்பாறை மாவட்டத்தில் பிறந்து வளர்ந்த ஒருவர் இந்த மாவட்டத்திற்கு அரசாங்க அதிபராக நியமிக்கப்பட்டிருப்பது இதுவே முதல் தடவையாகும் நான் இன மத மொழி வேறுபாடுகள் இல்லாத ஒரு நல்ல சூழலை இந்த மாவட்டத்தில் கட்டியெழுப்ப எதிபார்த்துள்ளேன். எனக்கு உங்கள் ஒவ்வொருவரினதும் ஒத்துழைப்பு முக்கியமான ஒன்றாகும்.

என்னை பிரதம அதிதியாக அழைத்து இப்படியான ஒரு கௌரவத்தை வழங்கிய இன்றைய நாளை என்னால் மறக்க முடியாது. இதனை ஏற்பாடு செய்த அனைவருக்கும் நன்றிகள் என்று தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் தமிழர் பாரம்பரிய கலாசாரத்தை பிரதிபலிக்கும் மங்கள வாத்தியங்கள் இசைக்கப்பட்டதுடன் மாணவர்களின் நடனமும் இடம் பெற்றன. நிகழ்வின் போது தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு தமிழ் இளைஞர் சேனை அமைப்பினால் வாழ்வாதார உதவிகளும் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வி.ஜெகதீசன், பிரிகேடியர் அபயகோன், கல்முனை வடக்கு பிரதேச செயலாளர் ரி.ஜெ.அதிசயராஜ், உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் எம்.எல்.புத்திக, கல்முனை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எம்.றபீக், 18 வது பிரிவு கட்டளையிடும் இராணுவ அதிகாரி, மேஜர் சிறிசேன உட்பட பலர் கலந்து கொண்டனர்

அம்பாறை மாவட்டத்தின் புதிய மாவட்ட அரசாங்க அதிபர் கல்முனையில் தனது முதல் நிகழ்வில் கலந்து கொண்டதையிட்டு தமிழ் இளைஞர்களால் அரசாங்க அதிபருக்கு முடி சூடப்பட்டு பொன்னாடை போர்த்தி மகத்தான வரவேற்பும் இங்கு வழங்கப்பட்டது.

# தலதா மாளிகைக்கு வருகை தரும் பக்தர்களின் வசதிக்காக டொம்லின் பூங்கா மற்றும் நகர்ப்புற வாகன நிறுத்தப் பூங்கா ஆகியவை பிரதமரினால் திறந்துவைப்பு

(வாஸ் கூஞ்ஞ)

தலதா மாளிகைக்கு வருகை தரும் பக்தர்களின் வசதிக்காக நிர்மாணிக்கப்பட்ட 'டொம்லின் பூங்கா' மற்றும் 'சஹஸ் உயன' நகர்ப்புற வாகன நிறுத்தப் பூங்கா ஆகியவை ஞாயிற்றுக்கிழமை (16.01.2022) கௌரவ பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அவர்களினால் திறந்துவைக்கப்பட்டது.

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் கீழ் மூலோபாய நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டத்தின் ஊடாக இந்தப் பூங்காக்கள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன.

டொம்லின் பூங்காவின் நினைவு பலகையை கௌரவ பிரதமர் திறந்து வைத்தார். கௌரவ பிரதமர் அங்கு கண்காணிப்பு விஜயத்தில் ஈடுபட்டதுடன்இ திட்டத்தின் முன்னேற்றம் குறித்து மூலோபாய நகர அபிவிருத்தி திட்டத்தின் முதன்மை ஆலோசகர் எம்.எம்.ஜே.இ.ஜி.பண்டார அவர்கள் விளக்கமளித்தார்.

யாத்திரிகர்கள் இளைப்பாறுவதற்கு அறைகள்இ சுகாதார வசதிகள் மற்றும் 16 விற்பனை நிலையங்களை கொண்ட டொம்லின் பூங்காவை நிர்மாணிப்பதற்காக உலக வங்கியின் நிதி உதவியின் கீழ் செலவான தொகை 3%4 மில்லியன் ரூபாயாகும்.

அதனை தொடர்ந்து சஹஸ் உயன ‘நகர்ப்புற வாகன நிறுத்தப் பூங்கா ‘இற்கு விஜயம் செய்த கௌரவ பிரதமர் அதன் நினைவு பலகையை திறந்து வைத்தார். திறந்தவெளி அரங்குஇ கைவினைப்பொருட்கள் கட்டிடத்தொகுதிஇ உணவருந்தும் பகுதி மற்றும் குழந்தைகள் பூங்கா ஆகியவற்றைக் கொண்ட இந்த பூங்காவில் ஓய்வெடுக்கும் பகுதியும் அமைக்கப்பட்டுள்ளது.





உலக வங்கியின் நிதி உதவியின் கீழ் 531 மில்லியன் ரூபாய் செலவில் நிர்மாணிக்கப்பட்டுள்ள இந்த நகர்ப்புற வாகன நிறுத்துமிட பூங்கா ஏற்கனவே இந்த வாகன நிறுத்தப் பூங்கா நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

மல்வத்து பீடத்தின் அனுநாயக்கர் நியங்கொட விஜிதசிறி தேரர் அவர்களும் இதன்போது பங்கேற்றிருந்தார்.

அஸ்கிரி பீடத்தின் அனுநாயக்கர் வெண்டறுவே உபாலி தேரர் இதன்போது அனுசாசனம் நிகழ்த்தினார்.

‘இந்த நகரம் 1312 ஆம் ஆண்டு நான்காம் பராக்கிரமபாகு மன்னர் காலத்தில் உருவாக்கப்பட்டது. 21 ஆம் நூற்றாண்டில்இ நமது தற்போதைய அதிமேதகு ஜனாதிபதிஇ கௌரவ பிரதமர் தலைமையில்இ அந்த நகரத்தின் செல்வ வளத்தை எமக்கும்இ நமது நாட்டிற்கும்இ நமது குடிமக்களுக்கும் திரும்பக் கொடுப்பதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம்.

இன்றைய ஜனாதிபதி இந்த நாட்டை சுபீட்சத்தை நோக்கி கொண்டு செல்வதற்கு பாரிய முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றார். வரலாற்றில் மிகவும் வலுவான தலைமை மற்றும் வலுவான அரசாங்கத்தின் கீழேயே வளமான மக்கள் இருந்துள்ளனர். நமக்கு பல ஆட்சியாளர்கள் இருக்கலாம் ஆனால் தலைவர்கள் அவசியம்.

எனவே அந்தத் தலைமையின் கீழ் தற்போதைய ஜனாதிபதியும் பிரதமரும் அமர்ந்து இந்நாட்டுக்கு சுபீட்சத்தை ஏற்படுத்துவார்கள் என்ற நம்பிக்கை உள்ளது. ஒரு நாட்டின் வளர்ச்சிக்கு கருத்துகளும் அணுகுமுறைகளும் குறிப்பாகத் தேவை.நாடு வளர்ச்சியடைய வேண்டுமானால்இ நான்கு காரணிகள் கவனிக்கப்பட வேண்டும்.

முதலில் நாட்டைப் பற்றி சிந்திக்க வேண்டும். இரண்டாவது விடயம் அவர்களின் கடமையைப் பற்றி சிந்திக்க வேண்டும். மூன்றாவதாகஇ தமது குடும்பம் குறித்தும் அடுத்ததாக தம்மை பற்றியும் சிந்திக்க வேண்டும்.

துரதிர்ஷ்டவசமாகஇ நம் நாட்டில் பெரும்பாலான மக்கள் அதனை தலைக்கீழாகவே பின்பற்றுகிறார்கள்இ முதலில் தங்களைப் பற்றியும்இ பின்னர் குடும்பத்தைப் பற்றிஇ பின்னர் கடமையைப் பற்றிஇ இறுதியாக நாட்டைப் பற்றி சிந்திக்கிறார்கள். எனவேஇ அந்தப் பாதையை மாற்றுவதற்கான நாட்டின் தலைமை இப்போது எங்களிடம் உள்ளது.

எனவே நாம் நமது பொறுப்பை நிறைவேற்ற வேண்டும். நாட்டில் நாம் எதிர்கொள்ளும் சவால்களை நாம் புரிந்து கொள்ள வேண்டும். நாட்டின் கௌரவ பிரதமருக்கு அதிமேதகு ஜனாதிபதிக்கு மட்டும் பொறுப்புகள் வழங்கப்படுமானால் இந்த நாட்டை மீளக் கட்டியெழுப்புவது கடினமாகும். எனவேஇ குடிமக்களாகிய நாம் அதற்கு ஆதரவளிக்க வேண்டும். ஐந்து வருடங்கள் ஆட்சியில் இருக்கும் ஒரு அரசாங்கத்திற்கு ஆதரவளிப்பது உண்மையில் முக்கியமானது. அதிகாரப் போட்டியை வீழ்ச்சியடையச் செய்ய அதனை உதாசீனப்படுத்த முற்பட்டால், மக்கள் பாதிக்கப்படுவார்கள்.

எனவே பொறுமையைக் கடைப்பிடிக்க வேண்டும்இ விமர்சனம் செய்ய வேண்டும்இ ஆனால் இது போன்ற நல்ல வேலையை இங்கே பாராட்ட வேண்டும்× என வணக்கத்திற்குரிய அனுநாயக்கர் தெரிவித்தார்.

வாகன ஒழுங்குறுத்துகைஇ பேருந்துப் போக்குவரத்துச் சேவைகள் மற்றும் புகையிரதப் பெட்டிகள் மற்றும் மோட்டார் வாகன கைத்தொழில் மற்றும் சமூகப் பொலிஸ் சேவைகள் இராஜாங்க அமைச்சர் கௌரவ திலும் அமுனுகமஇ

'கண்டி அதிவேக நெடுஞ்சாலை என்பது உங்கள் காலத்தின் அடிக்கல்லை அமைக்க நீங்கள் கனவு கண்ட ஒரு முன்னாள் திட்டமாகும். உங்களைப் போலவே மஹாநாயக்க தேரர்கள்இ அனுநாயக்க தேரர்களை சந்திக்க செல்லும் போது அவர்கள் கேட்பதும் அதிவேக நெடுஞ்சாலை செயற்பாடுகள் எப்படி என்றே எம்மிடம் கோருவர். நேற்றைய தினம் எங்களுக்கு நம்பிக்கையைத் தந்த மற்றொரு நாள்.

எஞ்சியவற்றை கலகெதர மற்றும் கடவத்தை மீரிகம பகுதி வரையான பகுதிகளை ஒன்றரை அல்லது இரண்டு வருடங்களுக்குள் முடிக்குமாறு கௌரவ பிரதமர் அவர்கள் தெளிவான உத்தரவை வழங்கியதை நாம் பார்த்தோம்.

அத்துடன் எமது தலதா மாளிகையில் தரிசனம் செய்ய வரும் மக்களுக்கும் பக்தர்களுக்கும் அடிப்படை வசதிகளைப் பெற்றுக் கொள்வதற்கு கண்டியில் இடமில்லை. இத்திட்டத்தின் மூலம் வெகு தொலைவில் இருந்து பேருந்தில் தரிசனம் செய்ய வரும் பக்தர்கள்இ தம்மை சுத்தம் செய்து கொள்வதற்கும்இ பூஜைக்கு தயார் செய்து கொள்வதற்கும்இ வழிபாட்டிற்கு தயாராவதற்கும் என நான்கு மாடி கட்டிடம் இத்திட்டத்தின் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.’

கண்டி மேயர் கேசர சேனாநாயக்க ‘30 வருடகால பயங்கரவாதத்தை ஒழித்து இந்த நாட்டின் ஆள்புல ஒருமைப்பாட்டைக் காத்த துணிச்சல்மிக்க தலைவராக கௌரவ பிரதமர் அவர்கள் இலங்கை வரலாற்றில் இடம்பெறுகிறார். கௌரவ பிரதமர் அவர்கள் மக்களால் மதிக்கப்படும் மக்கள் தலைவர் என்பதையும் நினைவுபடுத்த விரும்புகிறேன். உங்கள் அரசியல் வாழ்க்கைக்கு இன்றுடன் 52 ஆண்டுகள் பூர்த்தியாகிறது. கொவிட் தொற்றுநோயால் நாம் அனைவரும் பல சவால்களை எதிர்நோக்கி வரும் இவ்வேளையில் இந்த அபிவிருத்தித் திட்டங்களை வெற்றிகரமாக செய்து முடிக்க கிடைத்தமையினால் நாமும் கண்டி மக்களும் பாக்கியவான்கள். இதற்காக கண்டி மாநகர சபையின் சார்பில் நன்றி தெரிவிக்க விரும்புகின்றேன்’ எனத் தெரிவித்தார்.

குறித்த நிகழ்வில் கௌரவ அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்லஇ மத்திய மாகாண ஆளுநர் சட்டத்தரணி லலித் யூ கமகேஇ கௌரவ இராஜாங்க அமைச்சர்களான திலும் அமுனுகமஇ லொஹான் ரத்வத்தேஇ கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களான வசந்த யாப்பா பண்டாரஇ குணதிலக ராஜபக்ஷஇ உதயன கிரிந்திகொடஇ கண்டி மேயர் கேசர சேனாநாயக்கஇ கண்டி மாவட்ட செயலாளர் சந்தன தென்னகோன்இ நகர அபிவிருத்தி அதிகாரசபையின் தலைவர் உதய நாணயக்காரஇ பணிப்பாளர் நாயகம் பிரசாத் ரணவீரஇ நகர அபிவிருத்தி அதிகாரசபையின் மத்திய மாகாண பணிப்பாளர் பீ.குணதிலக உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# மக்கள் வங்கியின் தேசிய இந்துமா மன்றத்தின் ஏற்பாட்டில் பல்வேறு சமூக பணிகள்





(வி.சுகிர்தகுமார்)

மக்கள் வங்கியின் தேசிய இந்து மாமன்றத்தின் ஏற்பாட்டில் பல்வேறு சமூக பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதற்கமைவாக அக்கரைப்பற்று ஆலையடிவேம்பு திருநாவுக்கரசு வித்தியாலயத்திற்கான போட்டோ கொப்பி இயந்திரம் இன்று வழங்கி வைக்கப்பட்டதுடன் ஆலையடிவேம்பு பிரதேச இந்துமாமன்றத்திற்காக 650000 ரூபா பெறுமதியில் கொள்வனவு செய்யப்பட்ட கதிரைகளும் இன்று ஒப்படைக்கப்பட்டன.

திருநாவுக்கரசு வித்தியாலயத்தின் அதிபர் சுரேஸ் ஸ்டீபன்சன் தலைமையில் பாடசாலையில் இடம்பெற்ற நிகழ்வில் மக்கள் வங்கியின் இந்துமாமன்றத்தின் தேசிய செயலாளரும் வெள்ளவத்தை கிளையின் முகாமையாளருமான ஜி.எஸ்.மணிமாறன் பிரதம அதிதியாக கலந்து கொண்டதுடன் மக்கள் வங்கியின் அம்பாரை மாவட்ட பிராந்திய அலுவலகத்தின் பிரதி முகாமையாளர் வி.ஜனார்த்தனன், இந்துமாமன்ற அம்பாரை மாவட்ட இணைப்பாளர் எஸ்.சுந்தரராஜன், முகாமையாளர்களான கே.கஜேந்திரன், எம்.பி.எம். அன்வர், பிரதி முகாமையாளர்களான எஸ்.ராஜகாந்தன், எஸ்.சுதாகரன், வங்கி உத்தியோகத்தர் எஸ்.மணிமாறன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் பாடசாலை கற்றல் செயற்பாடுகளுக்கு தேவைக்காக கொள்வனவு செய்யப்பட்ட போட்டோ பிரதி இயந்திரம் பாடசாலை அதிபரிடம் கையளிக்கப்பட்டது.

இதேநேரம் ஆலையடிவேம்பு பிரதேச இந்துமாமன்றத்தின் தலைவர் வி.சந்திரசேகரம் தலைமையில் இந்து மாமன்ற கட்டடத்தில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்ட மக்கள் வங்கி அதிகாரிகளுக்கு மகத்தான வரவேற்பளிக்கப்பட்டது.

விசேட புஜைகளை தொடர்ந்து இடம்பெற்ற நிகழ்வில் நந்திக்கொடியேற்றப்பட்டது. பின்னர் கலைநிகழ்வும் கலந்து கொண்டவர்களுக்கு நினைவுச்சின்னம் வழங்கி வைக்கப்பட்டதுடன் இந்துமாமன்றத்தின் தேசிய செயலாளர் ஜி.எஸ்.மணிமாறன் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டார்.

இதன்பின்னராக ஆலையடிவேம்பு பிரதேச இந்துமாமன்றத்திற்கான மன்றத்திற்கான கதிரைகள் ஒப்படைக்கப்பட்டதுடன் மன்றத்தினால் நிருவகிக்கப்படும் அறநெறி ஆசிரியர்களுக்காக ஜெயச்சந்திரன் டெக்டைல்ஸ் நிறுவனத்தால் வழங்கி வைக்கப்பட்ட சீருடைகளும் வழங்கி வைக்கப்பட்டன.

# சாதனை மாணவி தர்ஷிக்காவை ஆலையடிவேம்பு பிரதேச மத்தியஸ்த சபை கௌரவித்தது

(வி.சுகிர்தகுமார் )



அக்கரைப்பற்றின் சாதனை மாணவி தர்ஷிக்காவினை ஆலையடிவேம்பு பிரதேச மத்தியஸ்த சபை நேற்று கௌரவித்தது.

கொழும்புப் பல்கலைக்கழகத்தின் பொதுப் பட்டமளிப்பு விழா நிகழ்வின்போது 13 தங்கப் பதக்கங்களை பெற்று சாதனை படைத்த அக்கரைப்பற்றினைச் சேர்ந்த மருத்துவர் தணிகாசலம் தர்ஷிகாவின் இன்று சென்ற ஆலையடிவேம்பு பிரதேச மத்தியஸ்த சபையினர் வாழ்த்தினை தெரிவித்துக்கொண்டதுடன் பொன்னாடை போர்த்தி நினைவுச்சின்னமும் வழங்கி கௌரவித்தனர்.

ஆலையடிவேம்பு பிரதேச மத்தியஸ்த சபையின் தலைவியும் மகாசக்தி அமைப்பின் தலைவியுமான துளசிமணி மனோகரராஜன்; தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் சபை உறுப்பினர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு கலந்து சிறப்பித்தனர். மத்தியஸ்த சபையின் உறுப்பினரான தர்ஷிகாவின் தந்தை தாய் உள்ளிட்ட குடும்பத்திற்கும் வாழ்த்தினை தெரிவித்த சபையின் தலைவர் உள்ளிட்டவர்கள் இணைந்து தர்ஷிக்காவுக்கான நினைவுச்சின்னத்தினை வழங்கி வைத்தனர்.

இந்நிகழ்வில் கருத்து தெரிவித்தவர்கள் தர்ஷிக்கா போன்ற சாதனையாளர்களை கௌரவிப்பதில் பெருமையுடன் மகிழ்ச்;சியுறுவதாகவும் குறிப்பிட்டனர்.

சாதனை மாணவி தர்ஷிக்கா ஆலையடிவேம்பு பிரதேச மத்தியஸ்த சபைக்கு நன்றி கூறியதுடன் தனது சாதனை அனுபவங்களையும் பகிர்ந்து கொண்டார். தமது குடும்பம், ஆசிரியர்கள், நல்ல நண்பர்கள், விடா முயற்சி என்பன தனது சாதனைக்கு வித்திட்டதனையும் அவர் நினைவுகூர்ந்தார்.

# மாணவர்களுக்கிடையே போட்டிகளை நடாத்தி வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்கள் வழங்கும் நிகழ்வு







(ஏறாவூர் நிருபர் நாஸர்)



மட்டக்களப்பு மாவட்ட பாடசாலை மாணவர்களுக்கிடையே பரதநாட்டியம், கிராமிய நடனம், சங்கீதப்பாடல் ஆகிய போட்டிகளை நடாத்தி வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்கள் வழங்கும் நிகழ்வு நேற்று மாலை செங்கலடி பிரதேச கூட்டுறவு மண்டபத்தில் நடைபெற்றது.

மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் நவரூப ரன்ஜினி முகுந்தன் இந்நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டார். மேல் மருத்தூர் ஆதிபராசக்தி வழிபாட்டு மன்றம் இதனை ஏற்பாடு செய்திருந்தது.

மறைந்த இசைமேதை, கர்நாடக சங்கீத ஆசிரியை சிவசக்தி சிவநேசன் நினைவாக ஏற்பாடு செய்யப்பட்ட இந்நிகழ்வு மன்றத்தின் இணைப்பாளர் கே. துரைராசா தலைமையில் நடைபெற்றது.

செங்கலடி பிரதேச சுகாதார வைத்தியதிகாரி ஈ. சிறிநாத் மற்றும் ஏறாவூர் பொலிஸ் நிலையத்தின் பதிய பொறுப்பதிகாரி ஏஎம்எம். நஜீப் உள்ளிட்ட பலர் இந்நிகழ்வில் பிரசன்னமாயிருந்தனர்.

இசைஜ்ஜ் கல்வி மற்றும் சமூக மேம்பாடு போன்ற துறைகளில் பணியாற்றிய சமூக முன்னோடிகள் பலர் இதன்போது பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டதுடன் போட்டி நிகழ்ச்சிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பணப்பரிசில்கள் மற்றும் நினைவுச்சின்னங்களும் வழங்கப்பட்டன.

மட்டக்களப்பு மாவட்டத்தில் பின் தங்கிய பிரதேசங்களான வாகரை மற்றும் கரடியனாறு போன்ற பகுதிகளிலுள்ள பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் மற்றும் வறிய குடும்பங்களுக்கு வாழ்வாதாரத் தொழில் உபகரணங்களும் மறைந்த இசைமேதை, கர்நாடக சங்கீத ஆசிரியை சிவசக்தி சிவநேசன் நினைவாக வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# மன்னார் கமக்காரர்கள் தங்கள காணிப் பதிவை உறுதிப்படுத்திக் கோளளவும்.

( வாஸ் கூஞ்ஞ)

மன்னார் மாவட்டத்தில் 2022 ஆம் ஆண்டுக்கான வயற்காணி இடாப்பு மீள்திருத்த வேலைகள் இப் பகுதியிலுள்ள கமநல சேவைகள் நிலையங்களில் மேற்கொளள்ப்பட்டு வருவதால் மன்னார் மாவட்டத்தில் உளள் 13 கமநல சேவைகள் நிலையங்களிலும் வயற்காணி பதிவேடுகளை விவசாயிகள் பார்வையிட முடியும் எனவும் தங்கள காணிப் பதிவை உறுதிப்படுத்திக் கொளளவும் எனவும்; இவ் வட்டாரம் மன்னார் விவசாயிகளுக்கு தெரிவித்துள்ளது

இது தொடர்பாக மன்னார் கமநல சேவைகள் நிலையம் மன்னார் விவசாயிகளுக்கு விடுத்திருக்கும் அறிவித்தலில் மன்னார் மாவட்டத்தில் 2022 ஆம் ஆண்டுக்கான வயற்காணி இடாப்பு மீள்திருத்த வேலைகள் இடம்பெற்று வருகின்றன. ஆகவே வயற்காணி இடாப்பு மீள்திருத்த வேலைகளின் பொருட்டு மன்னார் மாவட்டத்தில் உளள் 13 கமநல சேவைகள் நிலையங்களிலும் வயற்காணி பதிவேடுகளை விவசாயிகள் பார்வையிட முடியும் என்பதுடன் வயற்காணிப் பதிவேட்டில் திருத்தங்களை மேற்கொளவதற்கு எதிர்பார்த்துள்ள கமக்காரர்கள் தங்கள் வயற்காணி அமைந்துள்ள கமநல சேவைகள் நிலையங்களில் உரிய விண்ணபப்படிவங்களைப் பெற்று பூரணப்படுத்தி தேவையான ஆவணங்களுடன் கமநல சேவை நிலையங்களில் சமர்ப்பிப்பதன் மூலம் தங்கள் வயற்காணிப் பதிவைத் திருத்திக் கொள்ள முடியும்.


இதுவரை தங்கள் காணி தொடர்பில் உரிய ஆவணங்களைச் சமர்ப்பிக்காத கமக்காரர்களும் உரிய ஆவணங்களைச் சமர்ப்பித்து தங்கள் காணிப் பதிவை உறுதிப்படுத்திக் கொள்ளலாம்.

வயற்காணி இடாப்பு மீள்திருத்தம் தொடர்பான மேலதிக விபரங்களை தங்கள் பகுதிக்குப் பொறுப்பான விவசாய ஆராய்சச்சி உற்பத்தி உதவியாளரை அல்லது கமநல சேவைகள் நிலையங்களை தொடர்பு கொணடு; பெற்றுக் கொள்ளலாம்.

2022 ஆம் ஆண்டுக்கான வயற்காணி இடாப்பு மீள்திருத்த வேலைகள் ஜனவரி மாதத்திற்குள் முடிவுறுத்தப்படவுள்ளமையால் சுகாதார வழிகாட்டலக்ளுக்கமைய கொரோனா பாதுகாப்பு நடைமுறைகளைப் பின்பற்றி இவ் வேலைத்திட்டத்துக்கு; ஒத்துழைப்பு வழங்குமாறும் மன்னார் மாவட்ட கமநல அபிவிருத்தி திணைக்களம் அனைத்து கமக்காரர் களையும் கேட்டுக் கொண்டுள்ளது.


Aaran Ayurveda
wellness massage
www.aaranayurveda.ch
Aaran Ayurveda
& Wellness Massage
Stampfenbachstrasse-24, 8001 Zurich
Poststrasse-5, 3400 Burgdorf
Tel: 0041 43 243 60 66 | 0041 79 940 15 10
ஆயுள்வேத மூலிகை வைத்தியம் மூலம் (கேரளா)
சிகிச்சை அளிக்கப்படும். பழைய நோவாக இருந்தாலும்
நாங்கள் பூரண குணமடைய வைக்கின்றோம்.
சுவிஸ் நாட்டில் உள்ளவர்கள் மருத்துவ காப்புறுதி மூலம்
பணத்தைச் செலுத்தலாம். (Karankenkasse Anerkannt)
மேலதிகத் தொடர்புக்கு
Tel: 0041 43 243 60 66 | Whatsapp: 0041 79 940 15 10 (24 x 7)
www.aaranayurveda.ch


SAYENTHIRAN KATHIR
Geschäftsführer
STRAVEL
Flugtickets | Hotels | Reiseversicherungen
Luisenstr 21 8005 Zurich | info@stravel.ch www.stravel.ch
044 419 91 00 079 913 77 59


5ம், 6ம் ஆண்டு மாணவர்களுக்கான
புதிய கணினி வகுப்புக்கள் ஆரம்பம்
எங்கே? சூரிச் மாநகரில் கணினித்துறையில்
நூற்றுக்கணக்கான மாணவர்களை உருவாக்கிய
Online Tech Network
நிறுவனத்தில்
ECDL
Office
Windows 10
தொடர்புகளுக்கு
MANOJ MASTER
Online Tech Network
Militärstrasse 84, 8004 Zürich
043 811 80 90, 076 524 80 59


Seela
Food
Gastro AG
044 222 22 50
076 326 91 18
info@seelagastro.ch
www.seelagastro.ch
Züricherstrasse 15
8400 Winterthur.
Allegrotto
Pizza Kurier
Allegrotto Pizza Kurier
Bederstrasse 102, 8002 Zürich.
044 280 40 30 | 076 326 91 18
Toll free 0844 80 40 30
pizzakingzurich@gmail.com.
www.allegrotto.ch


IMPORTAS
International Foods & Beverages
Tel : 062 798 11 11
www.importasoftringen.ch
Parkweg 2, 4665 Oftringen
SWISS OFTRINGEN
மாநகரில்
வெகுவிரைவில்
மிகப்பிரமாண்டமான
OPENING
எதிர்பாராததை
எதிர்பாருங்கள்
Kings
TRS
Niru
LEELA
Suryaa
LION
Rubicon
Tilda
Aachi
Maggi
PG tips
ELAKKIA
OKF

# கடலுக்குச் சென்ற தந்தையும், மகனும் மாயம்: படகும், வலையும் மீட்பு

(எச்.எம்.எம்.பர்ஸான்)

கடலுக்குச் சென்ற தந்தையும், மகனும் காணாமல் போயுள்ள சம்பவமொன்று நேற்று திங்கட்கிழமை (17) இடம்பெற்றுள்ளது.

வாகரை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட காயங்கேணி கடல் பகுதியில் வைத்தே இருவரும் காணாமல் போயுள்ளனர்.

வழமையாக இயந்திரப் படகில் சென்று மீன்பிடித்து வரும் தந்தையும் மகனும் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை (16) மாலை 5 மணியளவில் கடலுக்குச் சென்றுள்ளனர்.

இவ்வாறு கடலுக்குச் சென்று வீடு திருப்பாத இருவரையும் தேட ஆரம்பித்த ஏனைய மீனவர்கள், அவர்கள் இருவரும் சென்ற இயந்திரப் படகையும், மீன்பிடிக்க கடலில் வைக்கப்பட்ட வலையையும் மீட்டுள்ளனர்.

இவ்வாறு காணாமல் போன இருவரும் காயங்கேணி சுனாமி வீட்டுத் திட்ட பகுதியை சேர்ந்த 55 மற்றும் 18 ஆகிய வயதுகளுடைய தந்தையும், மகனும் என்று தெரியவந்துள்ளது.

வாகரை பொலிஸாரின் உதவியுடன் காணாமல் போன இரு மீனவர்களையும் தேடும் பணிகள் மும்முரமாக இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# அம்பாறையில் தொழிலற்ற பட்டதாரிகள் 1200 பேருக்கு நிரந்தர நியமனம்





(காரைதீவு நிருபர் வி.ரி.சகாதேவராஜா)

தொழிலற்ற பட்டதாரிகள் மற்றும் டிப்ளோமாதாரிகளை அரசதொழிலுக்கு நியமனம்செய்யும் வேலைத் திட்டத்தின்கீழ் கிழக்கு மாகாணத்தில் அரச அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவை தரம் 3க்கு சுமார் 6000பேர் நியமிக்கப்பட்டுவருகின்றனர்.

அதன்முதற்கட்டமாக, அம்பாறை மாவட்டத்தில் 1200 பட்டதாரிகளுக்கான நிரந்தர நியமனம் வழங்கும் நிகழ்வு கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத் முன்னிலையில் அம்பாறை டிஎஸ். சேனநாயக்க மகாவித்தியாலயத்தில் கடந்த வியாழனன்று நடைபெற்றது.

அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான எம். வீரசிங்க மற்றும் டாக்டர் திலக்ராஜபக்ஷவும் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

கிழக்கு மாகாண் பிரதிப்பிரதம செயலாளர் (நிருவாகம்) பி.திசாநாயக்கவின் ஏற்பாட்டில் நடைபெற்ற நிகழ்வில் மாகாணசபையின் பேரவைச்செயலாளர் கலாநிதி எம்.கோபாலரெத்தினம் உள்ளிட்ட மாகாண அமைச்சுகளின் செயலாளர்கள் மற்றும் அம்பாறை அரசஅதிபர் டக்ளஸ் ஆகியோர் கலந்துகொண்டு நியமனங்களை வழங்கிவைத்தனர்.

கிழக்கு மாகாணத்தில் அரச அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவை தரம் 3க்கு சுமார் 6000பேர் நியமிப்பதற்கான நேர்முகப்பரீட்சை திருகோணமலையில் கடந்த டிசம்;பர் மாதம் நடைபெற்றது. அதற்கமைய இத்தெரிவு இடம்பெற்று கடந்த 03.01.2022இலிருந்து செல்லுபடியாகும்வண்ணம் இந்நிரந்தர நியமனக்கடிதம் வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை, மட்டக்களப்பு மாவட்டத்திற்கான பட்டதாரிகளுக்கு நிரந்தர நியமனக்கடிதங்கள் வழங்கும் நிகழ்வு எதிர்வரும் 23ஆம் 24ஆம் திகதிகளில் நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

# இளஞ்சைவப்புலவர் மற்றும் சைவப்புலவர் பரீட்சைப் பெறுபேறுகள் வெளியாகியுள்ளன

அகில இலங்கை சைவப்புலவர் சங்கத்தினால் நடத்தப்பட்ட 2020 ஆம் கல்வியாண்டிற்கான இளஞ்சைவப்புலவர் மற்றும் சைவப்புலவர் பரீட்சைப் பெறுபேறுகள் வெளியாகியுள்ளன என அகில இலங்கை சைவப்புலவர் சங்க செயலாளர் செ.த.குமரன் அறிவித்துள்ளார்.

சைவப்புலவர் பரீட்சையில் கலாநிதி இளையதம்பி ஜெயந்திரன் (யாழ்ப்பாணம்) திருமதி இராதா ஞானரெத்தினம் (மட்டக்களப்பு) திருமதி பத்மலோஷினி ஸ்ரீராமன் (யாழ்ப்பாணம்) வேளப்போடி மகேசரெத்தினம் (மட்டக்களப்பு) ஆகியோர் சித்தியடைந்துள்ளனர்.

இளம்சைவப்புலவர் பரீட்சையில் குமாரசாமிசர்மா சுவாமிநாதசர்மா (யாழ்ப்பாணம்) செல்வகுமார் கிருஸ்ணகுமார் (யாழ்ப்பாணம்) கியோமிதாதவநேசன் (மட்டக்களப்பு) கஜிதா சந்திரன் (யாழ்ப்பாணம்) சிவநந்தினி யோகநாதன் (மட்டக்களப்பு) கிருபைரத்தினம் சர்வேஸ்வரன் (மட்டக்களப்பு) மேனுசா கிருபராசா (மட்டக்களப்பு) ஜிதர்ஜினி கிருஸ்ணகுமார் (மட்டக்களப்பு) கஸ்தூரி வடிவேல் (மட்டக்களப்பு) கிருஸ்ணன் வரதராசன் (யாழ்ப்பாணம்) அஜித்தா உதயகுமார் (மட்டக்களப்பு) தர்மிதா சேனாதிபதி (மட்டக்களப்பு) மிதுஷ்சனா கமலநாதன் (மட்டக்களப்பு ) நித்தியானந்தன் பாபுதரன் (யாழ்ப்பாணம்) ஆகியோர் சித்தியடைந்துள்ளனர்.

# திருமலைக்கு ரோட்டரி 3220 ஆளுநர் வருகை







(ஹஸ்பர்)

ரோட்டரி இலங்கை மாவட்ட 3220 ஆளுநர் அருணி மலலசேகர (Aruni Makakasekara ) 15012022 அன்று திருகோணமலை ரோட்டரி கழகத்துக்கு விஜயம் செய்தார்.

ஆளுநரின் ஆளுநரின் துணை செயலாளர் ஜெயக்குமார் அவர்களும் மற்றும் உதவி. ஆளுநர் டாக்டர் கருணாகரனும் அவருடன் இணைந்து கொண்டார்கள் .

திருகோணமலை ரோட்டரி கழக தலைவர் த அகிலன் விருந்தினர்களை வரவேற்று, வரவேற்புரையை நிகழ்த்தினார் .

செயலாளர் க பிரபாகரனால் திருகோணமலை ரோட்டரி கழக நடவடிக்கைகளின் அறிக்கை பற்றி ஒரு சுருக்கமான விளக்கத்தை கொடுத்தார்.

தி / ஸ்ரீ சண்முகா இந்து மகளிர் கல்லூரியின் 5 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் வெற்றியாளர் செல்வி எம். அகன்ஷா அவர்களுக்கு ரொக்க விருது மூலம் பாராட்டப்பட்டு கௌரவிக்கப் பட்டார்.

தலைவர் அகிலனால் புல் வெட்டும் இயந்திரம் ஒன்று திரு வேலாயுதம் அவர்களுக்கு வழங்கப் பட்டது. தி / கணேச வித்யாலயம் தி / தங்கபுரம் பாடசாலையின் தலைமையாசிரியர்கள் கிராமப் பள்ளிகளுக்கு கணனி என்ற திடடத்தின் கீழ் கணனிகளைப் பெற்றுக் கொண்டனர். மேலும் 6 பாடசாலைகளுக்கு உரிய நேரத்தில் வழங்கப் படும்.

ஆளுநரின் துணை செயலாளர் ஜெயக்குமார் அவர்களால் மாவட்ட ஆளுநர் அறிமுகப்படுத்தப்பட்டார்.

ஆளுநர் அருணி மலலசேகர, தமது உரையில் திருகோணமலை ரோட்டரி கழக நடவடிக்கைககளை பாராட்டியதுடன் மேலும் அதிக தரமான இளம் உறுப்பினர்களைச் சேர்க்கவேண்டும் என கோரிக்கை விடுத்தார். புதிய திட்ட்ங்களை உருவாக்கி மக்களுக்கு சிறந்த சேவை செய்வதுடன், மக்கள் மத்தியில் ரோட்டரி பெயரை எடுத்து செல்லவேண்டும் என எடுத்துரைத்தார்

20222023 வருடத்துக்கான தலைவராக தெரிவு செய்யப்படட திரு .கிட்டினதாஸ் நன்றியுரை நிகழ்த்தினார்.



# யாழ் மாவட்ட உள்ளூராட்சி மன்ற பெண் உறுப்பினர்களின் சம்மேளனத்தின் புதிய நிர்வாகம் தெரிவு!



(பைஷல் இஸ்மாயில்)

யாழ் மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் 17 உள்ளூராட்சி மன்றங்களையும் உள்ளடக்கிய வகையில், உள்ளூராட்சி மன்ற பெண் உறுப்பினர்களின் சம்மேளனத்தின் பொதுக் கூட்டமும் புதிய நிர்வாகத்தெரிவும் (12) யாழ் க்கு தனியார் வீடுதியில் இடம்பெற்றது.

இந்த புதிய நிர்வாக தெரிவில் சம்மேளனத்தின் புதிய தலைவராக வேலணை பிரதேசசபையின் உறுப்பினர் திருமதி அனுஷியா ஜெயகாந்த் தெரிவு செய்யப்பட்டுள்ளதுடன் அச்சம்மேளனத்தின் புதிய செயலாளராக வலிமேற்கு பிரதேச சபையின் உறுப்பினர் திருமதி ஜெயகாந்தன் துவாரகாவும் பொருளாளராக சாவகச்சேரி நகரசபை உறுப்பினர் திருமதி தயாளராஜன் பௌலீனா சுபோஜினியும் தெரிவு செய்யப்பட்டள்ளனர்.

அத்துடன் குறித்த சம்மேளனத்தின் உபதலைவராக நல்லூர் பிரதேசசபையின் உறுப்பினர் திருமதி கௌசலா சிவாவும் உப செயலாளராக யாழ் மாநகரசபை உறுப்பினர் திருமதி சந்திரகுமார் அனுசியாவும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை யாழ் மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் 17 உள்ளூராட்சி மன்றங்களையும் உள்ளடக்கிய வகையில் தலா ஒவ்வொரு நிர்வாக உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

Prasath Coiffeur
Öffnungszeiten
Mo -Fr 10.00-19.00
Sa 09.00-18.00
Heinrichstrasse 120, 8005 Zürich.
NAT:076 565 64 57

Sikaram
துரிதபணமாற்றுச்சேவை
Sikaram INTL Gmbh
Heinrich Strasse 120, 8005 Zürich
Tel : 044 2410241
Fax : 044 2410245
sikaramgmbh@gmail.com / www.sikaram.com

# மலையக மக்கள் பேரவையினால் கற்றல் உபகரணங்கள்





(தலவாக்கலை பி.கேதீஸ்)

மலையக மக்கள் பேரவையின் செயல்பாடுகளில் ஒன்றான ' கல்விக்கு கரம் கொடுப்போம்' என்ற செயற்திட்டத்தின் கீழ் அட்டன் வெலிஓயா மலைமகள் தமிழ் மகா வித்தியாலயத்தில் கடந்த (2021) வருடம் 5 ஆம் ஆண்டு புலமைப் பரீட்சையில் சித்தி பெற்ற வறுமை கோட்டின் கீழ் வாழும் மாணவிக்கு சைக்கிள் ஒன்றும் பரீட்சை எழுதிய ஏனைய 25 மாணவர்களுக்கு அப்பியாச கொப்பிகள், பென்சில், பேனாக்கள் உட்பட கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

அத்தோடு க பொ த சாதாரண தரம் கல்வி கற்கும் 32 மாணவர்களுக்கு தமிழ், கணிதம் கற்றல் செயற்பாடு வினாக்கள் அடங்கிய கோவைகளையும் வழங்கி வைக்கப்பட்டன. இந்நிகழ்வில் மலையக மக்கள் பேரவையின் செயட்பாட்டாளரும் முன்னாள் மத்திய மாகாணசபை உறும்பினருமான ஆர். இராஜாராம் கலந்துக்கொண்டு இவற்றை வழங்கி வைத்தார்.



# தைபிறக்கட்டும்

**(படுவான் பாலகன்)**

கதிரவன் துயில்கொள்ள ஆரம்பிக்க, குருவிகளும் கூடுகள் சேர்க்கின்றன. மனை இருள் சூழ்கிறது. நாடியில் கையை ஊண்டி பிடித்தவளாக வீட்டின் முன்வாசலில் அமர்ந்திருக்கின்றாள் பார்வதி. பக்கத்துவீட்டில் பிள்ளைகளின் ஆராவரா ஒலிகளும், வீதிகளில் உடை, மரக்கறி வியாபாரிகளின் நடமாட்டமும், குருத்துவெட்டுவதும், கரும்பு தேடித்திரிவதுமாக சனங்கள் இயங்கிக்கொண்டிருக்கின்றனர். இச்சத்தங்கள் எதுவுமே பார்வதியின் செவிகளுக்கு கேட்கவில்லை. அவளின் ஆறுவயது மகளும் மண்ணில் உருவங்கள் செய்து விளையாடிக்கொண்டிருக்கின்றாள். அம்மா! அம்மா! என்று பிள்ளை கூச்சலிடும் சத்தமும் அவளின் காதுகளுக்கு எட்டவில்லை.

வெளிச்சமும் குறைந்து குறைந்து இருளும் அதிகரித்துக்கொண்டிருக்கின்றது. விளையாடிக்கொண்டிருக்கின்ற பிள்ளைக்கும் அச்சம் ஏற்படுகின்றது. ஓடிச்சென்று தாயின் கழுத்தினை இறுகப்பிடித்து

அம்மா! அம்மா! இருட்டாகித்து.. உள்ள போவம் வாங்க அம்மா.. என்கிறாள்.

அப்போதுதான் சூரியன் மறைந்து சந்திரன் வெளிச்சத்தினைக்கொடுத்ததைக் காண்கிறாள். பிள்ளையின் கைகளில் இருந்த மண்ணினை தட்டிவிடுகிறாள். அப்போது தாயின் முகத்தினைப் பார்த்த பிள்ளை.

'அம்மா பக்கத்துவீட்டில குருத்து, கரும்பு வெட்டி வைச்சிருக்காங்க' நம்மட ஒழுங்கையால உடுப்பு வித்துவாற மாமாட்ட உடுப்பும் எடுத்தவங்க அம்மா' 'நம்ம ஒன்றும் செய்ய இல்லையே அம்மா' நம்ம உடுப்பெல்லாம் எடுக்கிற இல்லையா அம்மா' என கேட்டதும், பார்வதிக்கு என்ன சொல்வதென்று தெரியவில்லை. எவ்வாறு பிள்ளைக்கு விளங்க வைப்பதும் என்றும் புரியவில்லை.

ஏழு பிள்ளைகளைக் கொண்ட குடும்பத்தில் பார்வதி 5வது பிள்ளை. இவளுக்கு ஒரே ஒரு ஆண் சகோதரர். அச்சகோதரனும், தாயும், தந்தையும் யுத்தத்தில் இறந்துவிட்டனர். பெண்சகோதரர்கள் திருமணமாகி ஒவ்வொருவரும் ஒவ்வொரு இடங்களில் இருக்கின்றனர். ஒருவருக்கொருவர் தொடர்பும் குறைவு. வசதிபடைத்தவர்களும் அல்லர். குடும்பத்தில் நடக்கும் நல்லது, கெட்டதுகளில் மட்டும் கலந்து கொண்டு உறவுகளுடன் பேசுவது மட்டுமே வழமை. பார்வதியும் பள்ளி படிக்கும் போது கெட்டிக்காரியாக இருந்தாள். தாய், தந்தை, சகோதரனை இழந்தமையினால் பார்வதியும் அவளுடன் திருமணம் செய்யாமல் இருந்த இரு சகோதரர்களும் மாமாவின் அரவணைப்பிலேயே இருந்தனர். மாமாவும் எப்படியாவது இவர்களை திருமணம் செய்து வைக்கவேண்டும் என்ற எண்ணத்திலேயே இருந்தார். இதனால் பார்வதியை தொடர்ந்து படிப்பிக்காமல் திருமணம் செய்து வைத்துவிட்டார். அத்துடன் அவரின் கடமைகள் முடிவடைந்துவிட்டதாகவும் நினைத்துவிட்டார்.

பார்வதி கல்வியில் முன்னிலையில் இருப்பாள், அரசதொழில் பெற்று உயர்நிலையில் நிற்பாள் என்று அடிக்கடி அவளை கற்பிக்கும் மாணவர்களும் சொல்வதுண்டு. இதனால் தனது எதிர்காலத்தினை நினைத்து நினைத்து பார்வதியும் பூரிப்படைவதுண்டு. ஆனால் அவளின் மனக்கோட்டை சரிந்து, குடும்பம் என்ற வாழ்க்கையில் புகுந்துகொண்டாள். தனது தாய், தந்தை உயிருடன் இருந்த போது அவள்கொண்ட சந்தோசத்தினையும், அவர்கள் இவளை கற்பிக்க வேண்டும் என்று எத்தனை ஆசைகள் கொண்டனர் என்றும் நினைத்து தனக்குள்ளே புலம்புவதுண்டு.

முன்பின் பார்த்திராத ஒருவனைதான் பார்வதியின் மாமனும் இவளுக்கு திருமணம் செய்து கொடுத்தார். இவளுக்கென 10பேர்ச் அளவிலான காணி ஒன்று இருந்தது. அந்தப்பகுதியில் உள்ள மக்கள் குடியிருக்கின்ற காணியின் காற்பகுதிதான் இவள் இருக்கின்ற காணி. அதில் ஓலையாலான குடிசையொன்றினையே அவளது மாமா கட்டிக்கொடுத்தார். திருமணம் செய்து கொடுத்துவிட்டு போனவர், திருமணம் ஆகிய 9வருடங்கள் கடந்தபோதிலும் ஒரு நாள்கூட அவளை வந்து பார்த்ததில்லை. அவளும் தேடிப்போனதுமில்லை.

திருமண நடந்த நாளைத்தவிர அனைத்து நாட்களும் குடித்துவிட்டுதான் வீட்டுக்கு இவளின் கணவர் வருவதுண்டு. அவ்வாறு வீட்டிற்கு வந்தும் பேசாமல் தூங்குவதும் இல்லை. ஒவ்வொரு நாளும் இடி, முழக்கம் போலதான் சத்தம் கேட்கும். அயலவர்கள் வேடிக்கை பார்ப்பவர். இது பழகிபோனதொன்றாக மாறிவிட்டது. அவ்வாறு பக்கத்துவீட்டில் உள்ளவர்கள் கேட்க சென்றாலும் அவர்களையும் வீண்வம்புக்கு அழைத்து முரண்பட்டுக்கொள்வதோடு, தேவையற்ற வீண் வார்த்தைகளும் பேசுவதுண்டு. இதனால் அவளைப்பார்த்து பரிதாபப்படுன்றவர்களாக மட்டுமே அயலவர்கள் உள்ளனர்.

கல்யாணம் செய்துகொடுத்த மாமனுக்கு இச்செய்தி தெரிந்தாலும் ஒரு நாள்பொழுதுகூட எட்டிப்பார்த்ததில்லை. பார்வதிக்கு நாளாந்தம் அடியினை வாங்கி வாங்கி உடல் மருத்துப்போனது போல, நாள்தோறும் ஏச்சினையும் கேட்டு மனமும் சலித்துபோய்விட்டது. திருமணம் செய்து ஓரிரு நாட்களிலேயே வீட்டு வேலையில் சேர்ந்துவிட்டாள். அதன்மூலம் கிடைக்கும் பணத்தினைக்கொண்டே குடும்பத்தின் செலவினை ஈடுசெய்து வந்தாள். அவ்வாறு கொண்டுவரும் பணத்தினையும் குடிப்பதற்காக அவளின் கணவன் பறித்தெடுப்பான். எல்லாவற்றையும் பொறுத்துக்கொண்டு பொறுமையாகவே இருப்பாள். எதிர்த்துக்கூட ஒரு வார்த்தை பேசமாட்டாள். பேசினாள் இன்னமும் விபரிதம் கூடும் என அவளுக்கு நன்கு தெரியும். போதை இல்லாத நேரத்தில் புத்திமதிகளை கூறினாலும் அதனையும் ஏற்கவில்லை. காலை எழுந்தவுடன் தண்ணீருக்கு பதிலாக சாராயமே குடிப்பான். இவளும் அறிவுரை கூறுவதனையும் நிறுத்திக்கொண்டாள். பிள்ளையொன்றினையும் பெற்றெடுத்தாள். அதற்கும் பிறகும் குடிப்பழக்கத்தினை நிறுத்தியாகவில்லை. பிள்ளையை வளர்ப்பதற்காக மிகவும் துன்பப்பட்டாள். வேலைக்கு செல்லாததினால் செலவுக்கு பணமில்லாது. அயலவர்களுடன் கடன்பெற்றுத்தான் பிள்ளையை வளர்த்தெடுத்தாள்.



இவளை நம்பி ஓரிரு நாட்களுக்கு பணத்தினை கடனாக கொடுத்தாலும், தொடர்ச்சியாக கொடுப்பதற்கு அயலவர்களும் கொடுப்பதற்கு தயங்கினர். இவளுக்கும் அவர்களின் சங்கடங்கள் விளக்கின. கடன்பட்டாலும் உரிய நேரத்திற்கு பணத்தினைக்கொடுத்துவிடுவாள். நேர்மையாகவும் நடந்துகொள்வதுண்டு. அயலில் உள்ளவர்களுக்கு சரீரஉதவிகளையும் செய்துகொடுப்பாள் இதனால், தயங்கி நின்றாலும், அவளின் முகத்தினை எவ்வாறு முறிப்பதென்று தெரியாமல், கேட்ட கடனை கொடுத்தனர். பிள்ளைக்கு ஆறுமாதம் கடந்ததும், பக்கத்து வீட்டில் பிள்ளையை விட்டுவிட்டு வேலைக்கு சென்றுவரத்தொடங்கி, படிப்படியாக கடனையும் அடைக்கத் தொடங்கினாள். வருடங்களும் கடந்தோடி பிள்ளைக்கும் ஆறுவயதாகவிட்டது. கணவனின் நாளாந்த நடவடிக்கை குறையவில்லை.



நாளைக்கு தைப்பொங்கல் எல்லா வீட்டிலும் அதற்கான ஏற்பாடுகள் நடைபெறுகின்றன. இவளும் தன் மகளுக்கும் எல்லா பண்டிகைகளுக்கும் புத்தாடை எடுத்துக்கொடுப்பதுடன், மகள் கேட்பதையும் வாங்கிக் கொடுப்பதுண்டு. தைப்பொங்கல் நாளை என்பதினால் தை மாதத்திற்கான சம்பளத்தினை முன்கூட்டியே வழங்க வேண்டுமென, தைமாதம் பிறந்ததில் இருந்தே வேலைசெய்யும் வீட்டுக்காரிரிடம் கேட்கத்தொடங்கி, இன்றுகாலையில் சம்பளத்தினைப்பெற்று மகளுக்கு புத்தாடையும், பொங்கலுக்கான பொருட்களும், சமையலுக்கும் மரக்கறிகளும் வாங்கிக்கொண்டு வீட்டில் வைத்துவிட்டு, வேலைசெய்யும் வீட்டில் நிறைய வேலைகள் இருந்தமையினால் மீண்டும் அவ்வீட்டிற்கு சென்றுள்ளாள்.

நாளை தைப்பொங்கல் என்பதினால் தனக்கு குடிப்பதற்கும், தனது நண்பர்களுக்கு கொடுப்பதற்கும் சாராயம் வேண்டும். இதற்கு பணமில்லையே என்று எண்ணிக்கொண்டு வந்த பார்வதியின் கணவனுக்கு, பார்வதி தனது மகளுக்கு ஆசையோடு வாங்கி வைத்திருந்த உடுப்புகளையும், அரிசிமூடையினையும் கண்டவுடன் மனதில் சந்தோசம் பொங்கியது. ஆடையினை எடுத்து விலையினை தேடுகிறான். அதிலே இரண்டாயிரத்து ஐந்நூறு என எழுதப்பட்டிருந்தது.

'விலைகூடிய உடுப்புத்தான் அரிசியும் 25கிலோகிராம் உள்ளது. இப்போ நாட்டில் பொருட்களுக்கு விலை அதிகம்தானே நாலாயிரம் போகும் போல..' என தனது மனதுக்குள்ளே சொல்லி ஆனந்தம் அடைகின்றான்.

வானத்தினைப் பார்த்து நேரத்தினைக் கணக்கிட்டு

'இன்னும் கொஞ்ச நேரத்தில் வந்திடுவாள்..' வேகமாக வீட்டை விட்டுப்போக வேண்டும்..

என்று வெளியேறுகின்றான் வேலைக்கு போன பார்வதியும் வீட்டிற்கு வருகிறாள். வாசல் கதவு இவள் அடைத்துவிட்டு சென்றது போல் இல்லை. கால்தடத்தினை பார்க்கின்றாள். தனது கணவனின் கால்தடங்கள் போல் தெரிகிறது. பக்கத்து வீட்டில் இருக்கின்ற மாரியை கூப்பிடுகின்றாள்.

'மாரி அக்கா இவர் வந்துபோனவரா? என்று கேட்க, 'ஓம் பிள்ளை' என்ற பதிலும் கிடைக்கிறது.

என்னவும் கொண்டு போகிறாரா? என்று கேட்க நானும் வேலையாக நிண்டதாலா பார்க்கவில்லை' என மாரியும் கூற, பார்வதியின் மனதில் இடிவிழுந்தது போல் இருக்க, பதற்றத்துடன் வீட்டுக்குள் ஓடுகிறாள். முன்வாசலில் விளையாடிக்கொண்டிருக்கும் தனது மகளையும் பார்க்காமலே அவசரமாக செல்கின்றாள். அவள் நினைத்தது அங்கு நடந்திருந்தது.

'அவர்தான் விற்க கொண்டு போய்விட்டார்' என்று தனக்குள்ளே கூறிவிட்டு, 'இது நமக்கு புதிது இல்லை தானே'

என தனக்குள் சமதானம் செய்து கொண்டு கால்தடுமாற, சோர்விழந்து, பலமின்றி வாசலிலே உட்காருகின்றாள். அப்போதுதான் பிள்ளையும் கழுத்தினை இறுக்கமாக பிடித்துக்கொண்டு உடுப்பு எடுக்கிற இல்லையா.. என்று கேட்கிறது.

பிள்ளையை கூட்டிக்கொண்டு கைகள் இரண்டையும், முகத்தினையும் கழுவிக்கொண்டு, வீட்டிற்குள் விளக்கினை ஏற்றி வைத்துவிட்டு, வெளியில் வந்து பார்க்கின்றாள் எல்லா வீட்டு வாசலிலும் வெளிச்சம் தெரிகிறது. இவள் வீட்டு வாசலில் இருளே சூழ்ந்திருக்கின்றது. பிள்ளை மீண்டும் 'அம்மா உடுப்பு எடுக்கிற இல்லையா? என்கிறாள். 'தைபிறக்கட்டும்' என மெதுவாக பதிலளிக்கிறாள் பார்வதி.


















# செங்கலடி இலுப்படிச்சேனையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஏற்பாட்டில் கறுப்புப் பொங்கல் நிகழ்வு












# மட்டக்களப்பு மாவட்டம்

## (வளங்கள் மற்றும் சவால்கள்)

### கிழக்கு மாகாணம் அறிமுகம்

கிழக்கு மாகாணம் 3 மாநகர சபையும் 5 நகர சபைகளையும் 37 பிரதேச சபைகளையும் கொண்டு மொத்தமாக 45 உள்ளூராட்சி சபைகளை கொண்டுள்ளதுடன் 9996 sqkm பரப்பையும் 431km கரையோர பகுதியையும் 1.86 million சனத்தொகையும் (இதில் 40‰ தமிழர்களையும் 38‰ முஸ்லிம்களையும் 22மூ சிங்களவர்களையும்) கொண்டுள்ளது. மேலும் முக்கியமான இயற்கை துறைமுகங்களையும் உள்ள+ர் விமான தளங்களையும் அழகிய கடற்கரைகளையும் கொண்டுள்ளது.

முழு இலங்கையின் நிலப்பரப்பில் 15%யும்,; 32% ரையோரத்தையும் (431km) கொண்டுள்ளதுடன் 8.5% சனத்தொகையையும் கொண்டு இலங்கையின் தேசிய வருமானத்திற்கு 5.6% பங்களிப்பையும் செய்து வருகின்றது.

இங்கு 56% தங்கி வாழ்பவராகவும் பிறப்பு விகிதம் 19.3% வும் இறப்பு விகிதம் 4.6% வும் சிசு மரணவீதம் 10.6% வும்இ கல்வியறிவு விகிதம் 88% வும் வேலையின்மை 6.4% வும் 10

தேர்தல் தொகுதிகளையும் 1085 கிராம சேவகர் பிரிவுகளையும் 2307 கிராமங்களையும் 498 வட்டாரங்களையும் 17 கல்வி வலயங்களையும் 46 MOH பிரிவுகளையும் 130 விவசாய பிரிவுகளையும் (AI) 45 கால்நடை வைத்திய பிரிவுகளையும் 10 வனவிலாகா பிரிவுகளையும் கொண்டுள்ளது.

கிழக்கு மாகாணம் 99 மாநகர சபை உறுப்பினர்களையும் 90 நகர சபை உறுப்பினர்களையும் 690 பிரதேச சபை உறுப்பினர்களையும கொண்டு மொத்தமாக 879 உறுப்பினர்களை கொண்டுள்ளது. இக் கிழக்கு மாகாண சபையின் பொறுப்பில் 11382km - வீதிகளும், 108 சந்தைகளும், 61 - ஆயுள்வேத வைத்தியசாலைகளும், 604 - மயானங்களும் 356 - விளையாட்டு மைதானங்களும், 127 - நூலகங்களும் உள்ளது.

### வறுமை மட்டம்

மேலும் கிழக்கு மாகாணம் இலங்கையின் உள்ளூர் நீர்நிலைகளில் 21.6%மான நீர்நிலைகளையும் (635sq.km) நெல் உற்பத்தியில்25% யும் பாலுற்பத்தியில்17மூ யும் மீன் உற்பத்தியில் 21% யும் கொண்டு கிழக்கு மாகாண பொருளாதாரத்தில் 29.2% விவசாயத்துறையும் 24.5% கைத்தொழில் துறையும் 46% சேவைத்துறையும் பங்களிப்பு செய்து வருகின்றது. கணனி அறிவு விகிதம் 14.8% வும் ஊழியர்படையில்45.8% மட்டுமே பயன்படுத்தப்படுவதனால் வேலையின்மை விகிதம் 6.4% மாக காணப்படுகின்றது. இதன் காரணமாக முன்னேற்ற சுட்டெண் 0.168 ஆக காணப்படுகின்றது. இது சகல மாகாணங்களிலும் இறுதி நிலையாகும். இதன் காரணமாக வறுமையிலும் கிழக்கு மாகாணம் 9வது இடத்தில் உள்ளமையை காணலாம்.

| மாவட்டம் | சிங்களம் | தமிழ் | முஸ்லிம் |
|---|---|---|---|
| திருக்கோணமலை | 25% | 31% | 44% |
| மட்டக்களப்பு | 1% | 73% | 26% |
| அம்பாறை | 37% | 18% | 45% |
| மொத்தம் | 22% | 40% | 38% |

### மட்டக்களப்பு மாவட்டம்

மட்டக்களப்பு மாவட்டம் வடக்கே வெருகல் ஆற்றினையும் கிழக்கே வங்காள விரிகுடாவையும் தெற்கே அம்பாறை மாவட்டத்தையும் மேற்கே பொலனறுவை மாவட்டத்தையும் எல்லைகளாக கொண்டுள்ளது. இம் மாவட்டம் 2633sqkm பரப்பையும் கொண்டு அண்ணளவாக 175000 குடும்பங்களையும் 6 இலட்சம் சனத்தொகையையும் கொண்டுள்ளது.

இம் மாவட்டம் 14 பிரதேச செயலக பிரிவுகளையும் 345 கிராம சேவகர் பிரிவுகளையும் 1036 கிராமங்களையும் 144 வட்டாரங்களையும் 3 தேர்தல் தொகுதிகளையும் 1 மாநகர சபையும் 02 நகர சபைகளையும் 09 பிரதேச சபைகளையும் கொண்டு 12 உள்ள+ராட்சி பிரிவுகளையும் கொண்டுள்ளது


இம் மாவட்டம் கடல் மட்டத்தில் இருந்து அதிகூடிய உயரமாக 7.6அ வரை வேறுபடுகின்றது. இங்கு வடக்கே 73.5மஅ எல்லையாகவும் தெற்கே 35.2மஅ எல்லையாகவும் உள்ளது. இம் மாவட்டத்தில் 52மூ பெண்களாகவும் 48% ஆண்களாகவும் உள்ளனர்.

மத ரீதியின் நோக்கில் 65% இந்துக்களும் 25.5% முஸ்லிம்களும் 8.5% கிறிஸ்தவர்களும் 1% சிங்களவர்களும் உள்ளனர். இங்கு வருடாந்த சராசரி மழைவீழ்ச்சி 1650mm காணப்படுகிறது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் 44 சந்தைகளையும், 30 ஆயுள் வேத வைத்தியசாலைகளையும், 170 மயானங்களையும், 127 விளையாட்டு மைதானங்களையும், 19 வாசிகசாலைகளையும், மேலும் 38 மாநகர சபை உறுப்பினர்களையும், 35 நகர சபை உறுப்பினர்களையும், 181 பிரதேச சபை உறுப்பினர்களையும் கொண்டு 254 உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். மேலும் 370 km தார் வீதிகளையும் 369km கொங்கிறீட் வீதிகளையும் 2431மஅ கிரவல் வீதிகளையும் 1299km மணல் வீதிகளையும் 46 ஆரம்ப பாடசாலைகளையும் உள்ளூராட்சி அதிகாரசபைகள் பராமரித்து வருகின்றன.

### 01. விவசாயத்துறை நீர்ப்பாசனம்

மட்டக்களப்பு மாவட்டம் 04 பாரிய குளங்களையும்,




06 நடுத்தர குளங்களையும,; 380 சிறிய நீரப்பாசன குளங்களையும் கொண்டு 53110 ஏக்கர் நீர்ப்பாசன வசதிகளையும் கொண்டுள்ளது. மொத்த நெல் உற்பத்தி 173185MT (MAHA) சராசரி உற்பத்தி 2925Kg (Ha) மொத்தமாக 161039 யுஉ நெற்செய்கை மேற்கொள்ளப்படுவதுடன் இதில் 92888யுஉ மழையை நம்பியே பயிர் செய்யப்படுகிறது. இங்கு 49850 குடும்பங்கள் விவசாயத்தை தமது ஐகவனேபாய தொழிலாக கொண்டுள்ளனர். இங்கு பெரும்போகத்தில் 61014ர்ய உம் சிறுபோகத்தில் 2%011ர்ய உம் பயிர்ச்செய்கைக்கு உட்படுத்தப்படுகின்றது.

மட்டக்களப்பு மாவட்டம் 3 பாரிய ஆறுகளையும் 15 சிற்றாறுகளும் காணப்படுவதுடன் 110முஅ கரையோரத்தையும் 5 வகையான வளமான மண் வகைகளையும் கொண்டுள்ளது.

மட்டக்களப்பில் நீர்வளம் போதியளவு இருந்தும் அதனை சேமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. இதுவரை உன்னிச்சை குளம் மட்டுமே உயர்த்தப்பட்டு குடிநீர் தேவைக்கு பயன்படுத்தப்படுகிறது. எனவே நவசிரி குளத்தில் இருந்து குடிநீர்த்திட்டம் ஆரம்பிக்கப்படுவதுடன் மூலம் வெல்லாவெளி பட்டிப்பளை பகுதிகட்கு குடிநீரை வழங்க முடியும். மேலும் உறுகாமம் - கித்துள் இணைப்பு வேலைத்திட்டத்தை விரைவாக ஆரம்பிப்பதன் மூலம் மட்டக்களப்பு மாவட்ட நீர்ப்பற்றக்குறையை நிவர்த்தி செய்வதுடன்

மேலதிக நீர் பயிர்ச்செய்கை நடவடிக்கைக்கும் பயன்படுத்துவதுடன் குடிநீர் நடவடிக்கைக்கு பாவிக்க முடிவதுடன் சித்தாண்டி வெள்ளப்பெருக்கையும் ஓரளவு கட்டுப்படுத்த முடியும.; மேலதிக 2000 மில்லியன் கனஅடி நீரை குடிநீருக்கு பயன்படுத்த முடியும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. எனவே இவ்வாறான



நிலைத்து நிற்க கூடிய அபிவிருத்தி திட்டங்கள் மூலம் மட்டக்களப்பு வெள்ளம், வரட்சி போன்ற இயற்கை அனர்த்தங்களை கட்டுப்படுத்த முடியும். மேலும் செயல் இழந்துள்ள குருமண்வெளி ஏற்று நீர்ப்பாசனத்திட்டம் - ஆயித்தியமலை கரடியனாறு குழாய் நீர் விநியோகத்திட்டம், கரடியனாறு கிராமிய நீர் விநியோக திட்டம் என்பவற்றை மீண்டும் செயற்படுத்த நடவடிக்கை எடுக்கவேண்டும். இதற்கான திட்டஅறிக்கைகள் ஏற்கனவே தயாரிக்கப்பட்டுள்ளன.

### கால்நடை வளர்ப்பு

இங்கு நாளாந்தம் 88466 முட்டைகள் உற்பத்தி செய்யப்படுவதுடன் 16141Kg மாட்டிறைச்சியும,; 1491Kg ஆட்டிறைச்சியும், 17566Kg கோழி இறைச்சியும் உள்ளூர் தேவைக்கு பயன்படுத்தப்பட்டு வருகின்றது. வருடாந்தம் 11அண லீற்றர் பால் உற்பத்தி செய்யப்படுகின்றது.

இங்கு 293648 மாடுகளும், 88216 கறவைப்பசுக்களும,; 89462 எருமைமாடுகளும், 114433 ஆடுகளும், 576733 கோழிகளும் வளர்க்கப்படுவதன் மூலம் நாளாந்தம் 36666டுவ பால் உற்பத்தி செய்யப்படுகிறது. இதில் 3630 டுவ மட்டும் தயிருக்கு பயன்படுத்தப்படுகிறது.

இங்கு 8%31 மாட்டுப்பண்ணைகளும,; 4455 ஆட்டுப்பண்ணைகளும,; 4044 கோழிப்பண்ணைகளும் உள்ளதுடன் பாலுற்பத்தியில் 5மூ வரை தேசிய உற்பத்திற்கு பங்களிப்பு செய்கின்றது. மேலும் 1% பால் பதனிடும் நிலையங்கள் மட்டும் உள்ளமையால் இதில் 67400 டுவள பால் மட்டுமே பதனிடப்படுகிறது.

நாளாந்தம் 200 மில்லி லீற்றர் பால் குடிக்க வேண்டும். எனினும் மட்டக்களப்பில் பால் நுகர்வு மிகவும் குறைந்த மட்டத்தில் இருப்பதால் போசாக்கின்மை அதிகரித்துச்செல்கின்றது. மேலும் பால் களஞ்சியப்படுத்தும் நிலையங்கள் அமைக்கப்பட்டு உள்ள+ர் தேவைகள் பூர்த்தி செய்யப்படுவதுடன் மிகுதி பெறுமதிசேர் உற்பத்திகளாக மாற்றப்படல் வேண்டும்.

### மீன்பிடி

மீன்பிடியை பொறுத்தவரை 39410அவ கடல் மீன் உற்பத்தியும,; 2404அவ நன்னீர் மீன் உற்பத்தியும் (வருடாந்தம்) இடம்பெறுகின்றது. 338 Mutilday Boat களும், 17 Single day boat களும், மரபுரீதியான தோணிகள் 5071ம் பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

இதன் முலம் தேசிய மீன் உற்பத்தியில் 8மூ வரை பங்களிப்பு செய்யப்படுகிறது. இங்கு 23000 குடும்பங்கள் மீன்பிடியில் தங்கி வாழ்கின்றன. இங்கு 223 மீன்பிடி கிராமங்களும், 127 படகுத்துறைகளும், வாழைச்சேனை மீன்பிடி துறைமுகமும் உள்ளன.

### சவால்கள் விவசாயத்துறை

விவசாய சார் கைத்தொழிற்சாலைகளை நிறுவுதல் அல்லது புனரமைத்தல். (உம்:கடதாசி தொழிற்சாலைஇ நெல்குற்றும் ஆலைகள், ஓட்டுத்தொழிற்சாலைகள், யோகட் தொழிற்சாலைகள், குடிநீர் தொழிற்சாலைகள்இ மட்பாண்ட தொழிற்சாலைகள்இ செங்கல் உற்பத்தி;சாலைகள்.)

விவசாயம்சார் பொருட்களுக்கான பெறுமதி சேர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல்.

விவசாய காணிகள் (நெல்) சமப்படுத்தல் மூலம் நெல் உற்பத்தி திறனை கூட்டுதல்.

விதைநெல் தரம் பிரிக்கும் நிலையங்கள் மற்றும் நெல் காய வைக்கும் நிலையங்கள், நெல் சேமிக்கும் நிலையங்களை நிறுவுதல்.

புதிய பொருத்தமான தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்தல் மற்றும் உயர் வருமானம் தரும் புதிய பயிர் இனங்களை அறிமுகப்படுத்தல்.

பணப்பயிர்கள்இ பழப்பயிர்கள்இ ஏற்றுமதி பயிர்கள் மற்றும் இயற்கை விவசாயத்தை ஊக்குவித்தல்;;.

விவசாய கிணறுகள் அமைத்தல் மற்றும் புதிய குளங்களை உருவாக்கலும் பாழடைந்த குளங்களை புனரமைத்தல் மற்றும் கால்வாய்களை புனரமைத்தல்.

புதிய நெல் இனங்களை அறிமுகப்படுத்தல் மற்றும் பெறுமதி சேர் சங்கிலியை உருவாக்கல்.

ஏற்றுமதிசார் விவசாய உற்பத்திகளை ஊக்குவித்தல்.

அறுவடைக்குப் பின்னரான இழப்புக்களை தவிர்க்கும் தொழில்நுட்ப பயன்பாடு.

சந்தை வசதிகளை உருவாக்குதல்.

களஞ்சிய வசதிகள் குளிரூட்டி வசதிகளை ஏற்படுத்தல்.

சகல தரிசு நிலங்களையும் விவசாயப் பயன்பாட்டிற்கு உட்படுத்தல்.

புதிய பொருளாதார மத்திய நிலையங்களை உருவாக்கல்.

கரடியனாறு விவசாய பண்ணை தரம் உயர்த்தப்படல்.

சுயதேவைக்கான உற்பத்தி முறை அறிமுகப்படுத்தல்.

நிலைத்து நிற்க கூடிய விவசாய அபிவிருத்தி மீது கவனம் செலுத்தல்.

தேசிய விவசாடய கொள்கையுடன் இணைத்து செயற்படல்.

பொருத்தமான உணவு பாதுகாப்பு முறைகள் செயற்படுத்தல் மூலம் போஷாக்கான உணவுகள் உட்கொள்ளல்.

அதிகூடிய சந்தைவிலை கிடைக்கக்கூடிய பயறு, உழுந்து உற்பத்திகள் அதிகரிக்கப்படல் வேண்டும் (மேட்டுப்பயிர்கள்).

விவசாய நிலங்கட்குச் செல்லும் பாதைகள் புனரமைக்கப்படல் வேண்டும்.

மண்வளம் பாதுகாக்கப்படல்; வேண்டும்.

விவசாயிகளுக்கு நவீன தொழில்நுட்ப வசதிகளை வழங்கல்.

யானைத்தாக்கத்தை கட்டுப்படுத்தல.;

உரிய சந்தை விலையை பெற்றுக்கொடுத்தல்.

சிபாரிசு செய்யப்பட்ட விதைகளை பெற்றுக்கொடுத்தல்.

இயற்கை அனர்த்தங்;களை (வெள்ளம் , வரட்சி) எதிர்கொள்ளல்.

விவசாய உபகரணங்கள் கொள்வனவு செய்யும் வசதியை ஏற்படுத்தல்.

மாற்றுப் பயிர்ச்செய்கை முறையினை அறிமுகப்படுத்தல். (ஊசழி னுடிஎநசளகைடிஉயவழைண)

| District | Index | Families - Poverty |
|---|---|---|
| Trincomalee | 10.0% | 39718 |
| Batticaloa | 11.3% | 60912 |
| Ampara | 2.6% | 17431 |
| Eastern Province | 7.3% | 118061 |
| National | 4.1% | 843913 |

உச்ச வளப்பயன்பாட்டினை மேற்கொள்ளல்.

பருவகால வேலையின்மையை தவிர்த்தல்.

விவசாய சங்கங்களை பலப்படுத்தல்.

அறுவடைக்குப் பிந்திய இழப்புக்களை குறைத்தல்.

கைவிடப்பட்ட குளங்களை புனரமைத்தல்.

பசளை கிருமி நாசினி பயன்பாடு பற்றிய அறி"ட்டல்.

விவசாய கள சேவைகளை அதிகரித்தல்.

உள்ள+ரில் தேவையான விதை நெல் உற்பத்தி செய்ய நடவடிக்கை எடுத்தல்.

விதை நெல் தரம் பிரிக்கும் நிலையங்களை உருவாக்கல். அதிகூடிய கிருமி நாசினி பசளை பயன்பாட்டினை குறைத்தல். உவர்த்தன்மை அதிகரித்துச் செல்வதைத்தடுத்தல். விவசாய ஆராய்ச்சி வசதிகனை ஏற்படுத்தல்.

காணிப் பயன்பாட்டுத்திட்டம் (உற்பத்தி திறனுடைய காணிகனை அடையாளம் காணல்)

மேலதிக நெல் உற்பத்திக்கான சந்தை வசதிகளை உருவாக்கல். நெல் சந்தைப்படுத்தல் சபை மாவட்ட நெல் செய்கை அட்டவணை( ஊயடவடிஎயவழைண ஊயடநெனயச) கவனத்தில் கொண்டு நெல் கொள்வனவு செய்தல்.

பயிர் காப்புறுதியில் ஆர்வத்தை உண்டாக்கல்.

மேட்டுநில பயிர் செய்கை ஊக்குவிக்கப்படல் (உ+ம் களுதாவளையில் 450ஏக்கரில் 1000 விவசாயிகள் பயன் பெற்று வருகின்றமை.

### கால்நடை வளர்ப்பு

பால் உற்பத்திப் பொருட்களை அறிமுகப்படுத்தப்படல். (யோகட் உற்பத்தி)

பால் தரப்படுத்தல் மற்றும் சேகரிக்கும் சேமிக்கும் நிலையங்களை அமைத்தல்.

கோழிக்குஞ்சு பொரிக்கும் நிலையங்களை உருவாக்குதல் இதன் மூலம் உள்ர் தேவைகளை ர்த்தி செய்ய முடியும்.

கால்நடை உணவு உற்பத்தி நிலையங்களை உருவாக்குதல்.

கால்நடை சினைப்படுத்தல் நிலையத்தை புனரமைத்தல் புதிதாக நிறுவுதல்.

மேய்ச்சல் தரை பிரைச்சினைகளை தீர்;த்து அதனை வர்த்தமானியில் பிரசுரித்தல்.

வீட்டு கால்நடை வளர்ப்பு முறையை ஊக்குவித்தல்.

புதிய கால்நடை இனங்களை அறிமுகப்படுத்தல் மூலம் பாலுற்பத்தியை அதிகரித்தல்.

கால்நடைகளுக்கான குடிநீர் சேமிப்பு தொட்டிகளை உருவாக்குதல்.

பெறுமதிசேர் உற்பத்திகளை ஊக்குவித்தல்.

### நீர்ப்பாசனம்

சிறந்த நீர்ப்பாசன முகாமைத்துவத்தை மேற்கொள்ளல். உப்பு நீர் அணைக்கட்டுகளை அமைத்தல்.

குளங்களை ஒருங்கிணைப்பு செய்தல்.(கித்துள் றூகம்) கைவிடப்பட்ட குளங்கள் கால்வாய்களை புதுப்பித்தல.; (கொங்கிறிட் இடல்)

முந்தானையாறு அபிவிருத்தி திட்டத்தை துரிதப்படுத்தல்.

சிறிய நடுத்தர பாரிய உள்ர் உற்பத்திகள் விற்பனை செய்யும் நிலையங்கள் உருவாக்கி டீயவவடி கசழனர உவ என விற்பனை செய்ய முடியும் இதற்கு வேண்டிய இலகு கடன்வசதிகள் தர நிர்ணயம் பயிற்சிகள் வழங்கப்படல் வேண்டும்

உள்ர் உற்பத்திகனை சந்தைப்படுத்துவதில் சகல தனியார் அரச நிறுவங்களும் முன்னுரிமை வழங்கி செயற்படும் வகையில் கொள்கை திர்மானம் எடுக்கப்படல் வேண்டும்.

### மீன்பிடி

சட்டவிரோத மீன்பிடிகள் தடைசெய்யப்படல் வேண்டும்.

மீன் குஞ்சு உற்பத்தி நிலையங்கள் உருவாக்கப்படல்.

அறுவடைக்கு பிந்திய தொழில்நுட்பத்தை அறிமுகம் செய்தல்.

மீன் பதப்படுத்தல் நிலையங்களை புனரமைத்தல் மற்றும் புதிதாக உருவாக்கல்.

(ஐஸ் உற்பத்தி)

மீன்பிடி தளங்களை உருவாக்கல்.

புதிய தொழில் நுட்பம் அறிமுகம்.

நன்னீர் மீன் உற்பத்தியை ஊக்குவித்தல்.

மீன்பிடி துறைமுகங்களை அமைத்தல் ஃ ஐஸ் உற்பத்தி நிலையங்களை உருவாக்கல்

இறால்/நண்டு உற்பத்தியை கிராமங்களில் உருவாக்கல்.

வெளிநாட்டு ஏற்றுமதியை ஊக்குவித்தல்(இறால் /நண்டு).

மட்டு வாவி ஆழமாக்கப்படல்

மீனவர் பொருளாதார மத்திய நிலையத்தை உருவாக்கல்.

இரா. நெடுஞ்செழியன் SLPS - MA (Econ)
திட்டமிடல் பணிப்பாளர், சுகாதார அமைச்சு,
கிழக்கு மாகாணம்.
Email: rncheliyan66@gmail.com
T.P. No: 077-7381635 / 0714735160

## திருமலை மண்ணின் கலைஞர்கள் ஓர் பார்வை - 11

# மூத்த பரதநாட்டியக் கலைஞர் நாட்டியக் கலைமணி ரேணுகாதேவி செல்வபுத்திரன் கலைஞரின் சாதனைப் பயணம்







மனிதன் பேசத் தெரியும் முன்பே கைக்குறிகளினாலும் , அங்க அசைவினாலும் தன் உணர்ச்சிகளை வெளியிட்டான். ஆதலால் மொழிக்கும் , இசைக்கும் முன்பே நடனக் கலைக்கு ஒரு வடிவம் இருந்ததென்பதை அறிஞர்கள் கூறுகின்றனர். பரதமுனிவர் நாட்டிய சாஸ்திரம் எனும் அடிப்படையில் எழுதியமையாலும், பாரத நாட்டில் தோன்றியமையினாலும், பாவம் , இராகம், தாளம் என்ற அடிப்படையில் சேர்ந்தமையினாலும் பரதம் என்ற பெயர் ஏற்பட்டது.

அவ்வகையில் , திருக்கோணமலையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்டவரும் , திருக்கோணமலை மண்ணில் 35 வருடங்களுக்கு மேலாக கலைச் சேவையில் ஈடுபட்டு வருபவரும், இராஜரெட்ணம் நடனாலயத்தின் ஸ்தாபகரும் , இயக்குனருமான மூத்த பரதநாட்டிய கலைஞர் நாட்டியக் கலைமணி, நாட்டிய வித்தகி, கலைச்சுடர் திருமதி. ரேணுகாதேவி செல்வபுத்திரன் கலைஞராவார். இக் கலைஞரை சுபீட்சம் நிகழ்நிலை பத்திரிகையின் திருமலை மண்ணின் கலைஞர்கள் ஓர் பார்வை என்ற பகுதிக்காக அவரது இராஜரெட்ணம் நடனாலயத்தில் சந்தித்த தருணத்தில் அவர் எம்முடன் பகிர்ந்து கொண்ட செவ்விகாணலின் தொகுப்பினை இங்கு காணலாம்.

இவர் இராஜரெட்ணம் வள்ளிநாயகம் தம்பதிகளுக்கு 1961 ஆம் ஆண்டு மகளாகப் பிறந்தார். இவர் தனது ஆரம்ப பாடசாலைக் கல்வியினை திருக்கோணமலை புனித பிரான்சிஸ் சவேரியர் மகா வித்தியாலயத்திலும், உயர் கல்வியை திருக்கோணமலை ஸ்ரீ சண்முகா வித்தியாலயத்திலும் பயின்றார். (தற்போது திருக்கோணமலை சண்முக இந்து மகளிர் கல்லூரி) பாடசாலைக் காலங்களில் நடனம் ,இசை , தமிழ் மற்றும் ஆங்கில நாடக , விளையாட்டுப் போட்டிகளில் கலந்து வெற்றி பெற்றுள்ளார். பாடசாலை மாணவ தலைவியாகவும் , சாரணர் குழுவிற்கு தலைவியாகவும் செயற்பட்டதோடு பல நடன, இசை நிகழ்வுகளிலும் கலந்து சிறப்பித்துள்ளார்.

இவர் சிறு வயது முதலே பரதக் கலையில் மிகுந்த ஆர்வமும் ஈடுபாடும் கொண்டவராக விளங்கினார். இவரின் பாதங்கள் ஐந்து வயது முதற்கொண்டே தாளஜதி போடத் தொடங்கியது. இவர் தனது ஐந்தாவது வயதிலே பரதத் துறையில் ஈடுபட தொடங்கியதற்கான தூண்டுகோலாக இருந்தவர் இவரது தந்தையார் ஆவார். இவரது தந்தை இசை மற்றும் நாட்டிய நாடகக் கலைகளில் மிகுந்த ஆர்வம் கொண்டவர் ஆவார். இதன் காரணத்தினாலேயே இவரது கடைசி மகளான இக் கலைஞர் மூலம் தன் அபிலாஷைகளை தீர்த்துக் கொள்ள வேண்டும் என்பதற்காக இவர் ஒரு பரத நாட்டிய ஆசிரியர் தகுதிக்கான கல்வி கற்பதற்குரிய அனைத்து வசதிகளையும் அளித்து எவ்வித குறைபாடும் இல்லாமல் இக் கலைஞரை ஊக்குவித்த பெருமைக்குரியவர் ஆவார். இவரது தந்தையைப் போன்றே இவரது தாயாரும் பல இன்னல்களுக்கும் , இடர்பாடுகளுக்குமிடையே இவரை சிறந்த கலைஞராக உயர்த்திப் பார்க்க விரும்பியவராவார். அதன் வகையில் இவரது பரதத்தின் முதற் பயணத்திற்கும், அதனைக் கற்றுத் தேர்வதற்கான உந்துசக்தியாக இருந்தவர்கள் இவரது பெற்றோர்களே ஆவர்.

அவ்வகையில் தனது ஆரம்ப பரதக்கலையை தமது குருவான அமரர். கைலாயப்பிள்ளையிடமும் பின்னர் திருமதி சாரதாதேவி ஸ்ரீஸ்கந்தராஜாவிடம் முறைப்படி பயின்றார். மேலும் இக் கலையினை தமது ஆத்ம குருவான திருமதி லக்ஷ்மி ஸ்ரீஸ்கந்தராஜாவிடமும் பயின்றார். அப்போதுதான் பரதக் கலையில் காணப்பட்ட நுணுக்கமான அசைவுகளையும் , முறையான நிருத்த அம்சங்களையும் உணரமுடிந்தது. இதனால் பரதக் கலையின் மேல் கொண்ட பற்றுதலும், ஆர்வமும் மேலும் இவருக்கு அதிகரித்தது. தொடர்ந்து தனது நாட்டியக் கலைக்கான பட்டப்படிப்பினை 1981 ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் இராமநாதன் நுண்கலைப் பிரிவில் நான்கு வருடங்கள் மேற்கொண்டார். அங்கு தமது குரு அமரர் லீலாம்பிகை செல்வராஜாவிடம் நாட்டியத்தின் சிறப்பம்சமான பாட்டுடன் நட்டுவாங்கம் செய்யும் தனித்துவமான கலைத்திறன் பயிற்சிகளையும் பெற்றுக் கொண்டார். அப்போது திருமதி.பத்மரஞ்சனி உமாசங்கர், திருமதி.கிருஷாந்தி ரவீந்திரா ஆகியோரிடமும் கற்றார். நடனம் மீது கொண்ட ஆர்வத்தினால் மேலதிகமான பிரத்தியேக நடனப் பயிற்சியை திருமதி.சாந்தினி சிவனேசனிடமும் பெற்றுக்கொண்டார். அக்காலப்பகுதியில் அவரது ஆத்ம குருவான அமரர்.வி.சிவசாமியிடம் நான்கு வருடம் சமஸ்கிருதம் கற்று அதிலும் பாண்டித்தியம் பெற்றார். அப்போது அவர் வழங்கிய ஆக்கமும் ஊக்கமும் மென்மேலும் பரதக் கலையில் சிறப்புற்று விளங்க வழிவகுத்தது. இவ்வாறு நடனக்கலையில் அவர் கொண்ட அளவில்லாத ஆர்வமும் , பக்தியும் தொடர்ந்தும் இத்துறையிலே கோப்பாய் அரசினர் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் பயில வாய்ப்பு கிடைத்தது. இக்காலத்தில் அமரர். பிரம்மஸ்ரீ வீரமணி ஐயரினை தனது குருவாகக் கொண்டு தனி ஒரு மாணவியாக இரு வருடங்கள் நாட்டிய நாடகங்கள் , புதிய படைப்புக்களின் உருவாக்கங்கள் , அமைப்புக்கள் போன்ற பல்வேறு விடயங்களில் சிறப்புத் தேர்ச்சி பெற்றார். இத்துடன் நின்றுவிடாது மேலும் தொடர்ச்சியாக தனது தொழில் தகைமையை விருத்தி செய்யும் பொருட்டு தேசிய கல்வி நிறுவகத்தினால் பட்டப் பின் கல்வி டிப்ளோமாவை மேற்கொண்டு அதிலும் தேர்ச்சி பெற்றார். இதுவரை காலமும் தனது பெற்றோரின் முழு ஆதரவுடனும் உடன்பிறந்த சகோதர சகோதரிகளின் அளவில்லா ஒத்துழைப்புடனும் தமது நாட்டிய பயணத்தைத் தொடர்ந்த அவர் தனது கணவரான கீ.இ.ஒ.அ செல்வபுத்திரனின் நிறைவான ஒத்துழைப்புடன் சிறப்பு பயிற்சிக்காக இந்தியா சென்று குருவாகிய அமரர் அடையார் லக்ஷ்மணனிடம் நட்டுவாங்கப் பயிற்சியையும் , ராதிகா சுராஜித்திடம் மேலதிக பயிற்சியையும் பெற்றார்.

இவ்வாறாக தனது பரதக் கலையினை முறையாகப் பயின்று நடனத்துறை ஆசிரியராக முழுமைப் பெற்று ஆசிரியர் சேவையினை 1986 தொடக்கம் 1988 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் நாவலப்பிட்டி கதிரேசன் குமார மகாவித்தியாலத்திலும், 1991 ஆம் ஆண்டிலிருந்து திருக்கோணமலை சென்மேரிஸ் கல்லூரியிலும் கடமையாற்றினார். அப் பாடசாலையில் தரம் 6 தொடக்கம் 13 வரை பரதக் கலையினை கற்பித்து க.பொ.த (சா/த), (உ/த) மாணவர்களுக்கு சிறப்பான பரீட்சை பெறுபேறுகளை பெறச் செய்தார். மேலும் தமிழ்த்தினப் போட்டிகளில் தனி , குழு நடனப் போட்டிகளில் பல தங்கப் பதக்கங்களை அகில இலங்கை ரீதியாக பெற்றுக் கொடுத்ததுடன் மூன்று தடவைகள் தொடர்ச்சியாக தங்கப் பதக்கங்களை பாடசாலைக்கு பெற்றுக் கொடுத்தமையால் அக் காலத்தில் வடகிழக்கு மாகாண ஆளுனராக கடமை புரிந்த திரு.காமினி பொன்சேகாவினால் சிறந்த நடன ஆசிரியர் என 1996 ஆம் ஆண்டு பாராட்டுச் சான்றிதழ் வழங்கி கௌரவிக்கப்பட்டார். இவர் பல நடன நிகழ்வுகள் , புதிய ஆக்கங்களை வெளிப்படுத்தினார். மாணவர்களுக்கு நாட்டியக்கலையில் ஆற்றுத் திறனை ஏற்படுத்தும் வகையில் நடன மேம்பாட்டு திட்டங்கள் பலவற்றை உருவாக்கிய இவர் இப் பாடசாலையிலிருந்து 2011ஆம் ஆண்டில் ஓய்வு பெற்றார்.

இவர் 1986 தொடக்கம் 1988 வரை 'ஆசிரியர்களுக்கான முன்னிலை சேவைப் பயிற்சி நெறி' இதற்கு நடன பாட விரிவுரையாளராக கடமையாற்றினார். தேசிய கல்வி நிறுவகத்தில் 1999 ஆம் ஆண்டு பரதநாட்டிய பாடத்திட்டம் தயாரிக்கும் கலைத்திட்டக் குழுவில் அங்கத்தவராக செயற்பட்டதுடன் , க.பொ.த சாதாரண தர செயன்முறை பரீட்சைக்கு உதவிப் பிரதான பரீட்சகராக 1991 தொடக்கம் 2011 ஆம் ஆண்டு காலப்பகுதியில் கடமையாற்றியுள்ளார்.

இவ்வாறாக இவர் பரதக் கலையில் கொண்ட அதீத ஆர்வத்திலும், அளவில்லாத பக்தியிலும், முயற்சியிலும் திருமலை மண்ணில் பரதம் தழைக்க தன்னாலான சேவையை செய்யும் பொருட்டு தன்னை முற்றாக அர்ப்பணித்து பெற்றோரின் ஆசியுடன் , தமது குருமாரின் வாழ்த்துடன் , கணவரின் நிறைவான ஆதரவுடனும் , சகோதர சகோதரிகளின் ஊக்கத்துடனும் 1991ஆம் ஆண்டு தனது தந்தையாரின் பெயரில் ‶ இராஜரெட்ணம் நடனாலயம் ‶ என்ற கலைக்கூடத்தினை ஸ்தாபித்து இன்றுவரை 31 வருடங்களாக நாட்டியச் சேவையை ஆற்றி வருகிறார். அந்த வகையில் இவ் நடனாலயத்தை ஆரம்பத்தில் செல்வி.நளாயினி பாலச்சந்திரனைத் தனது முதல் மாணவியாக கொண்டு ஆரம்பித்து அதன் பின்னர் பல நூற்றுக்கணக்கான மாணவிகள் பயின்று தற்சமையம் 50ற்கும் மேற்பட்ட மாணவிகள் இவரிடம் பரதக் கலையை பயின்று வருகின்றனர். இவரிடம் நடனக் கலையினை பயின்ற மாணவிகள் அனைவரும் உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் உயர்ந்த நிலைக்கு சென்றுள்ளதோடு ஆசிரியர்களாகவும் மற்றும் பல துறைகளில் விற்பன்னர்களாகவும் தமது திறமைகளை வெளிப்படுத்தி வருகின்றனர் என்பது பெருமைக்குரிய விடயமாகும். இவ் நடனாலயமானது மாணவர்களின் மத்தியில் புதையுண்டு கிடந்த ஆக்கத் திறனை வெளிக்கொணரும் வகையிலும், அவர்களின் சுய சிந்தனையையும், ஆக்கத்திறனையும் அடிப்படையாகக் கொண்டே இயங்கி வருகின்றது. அந்த வகையில் இவரது நடனாலயத்தின் மூலம் திருக்கோணமலை மாவட்டத்தின் கலை மற்றும் சமயம் சார்ந்த நிகழ்வுகளில் இவரது மாணவிகளின் நடன நிகழ்வுகள் ஆரம்பம் தொடக்கம் இன்றுவரை இடம்பெற்று வருகின்றமை பெருமைக்குரிய விடயமாகும். திருக்கோணமலை மாவட்டத்திலுள்ள பல்வேறு ஆலய திருவிழா நடன நிகழ்வுகளிலும் இவரது நடனாலய மாணவிகள் தமது தனித்திறமையை வெளிப்படுத்தி இவருக்கும், நடனாலயத்திற்கும் பெருமை சேர்த்துள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும். மேலும் வருடந்தோறும் வட இலங்கை சங்கீத சபையால் நடாத்தப்படும் பரீட்சைகளில் நடன மாணவிகள் தோற்றி அதிலும் முதல் தர சித்தி பெற்று இவ் நடனாலயத்திற்கு பெருமை சேர்த்து வருகின்றனர். வருடம் தோறும் கல்வி உயர்கல்வி அமைச்சினால் நடாத்தப்படும் தமிழ் மொழித் தினப் போட்டிகளில் தனி நடனம் , குழு நடனம் போன்ற நிகழ்வுகளில் நடனாலயத்தில் பயிலும் மாணவிகள் பங்கு கொண்டு தமது திறமையை மிகச் சிறந்த முறையில் வெளிப்படுத்தி சிறப்பான பெறுபேறுகளை பெற்று வருகின்றனர். இத்துடன் நின்றுவிடாது இவரின் அரிய முயற்சியினாலும் , மாணவர்கள் பெற்றோர்களின் தொடர்ச்சியான பங்களிப்பினாலும் நடனாலய மாணவிகளின் நாட்டிய திறமைக்கு களம் அமைக்கும் வகையில் ரூபவாஹினி தொலைக்காட்சி நிறுவனத்தின் பல்வேறு நிகழ்வுகளை அரங்கேற்றி நாட்டியக் கலையுலகில் ஒரு சிறப்பான தனி இடத்தை தக்க வைத்த பெருமை இவ் இராஜரெட்ணம் நடனாலயத்தையே சாரும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

தொடர்ந்து இவரது நடனாலய மாணவிகள் நாட்டியத்தின் சகல அங்கங்களையும், உருப்படிகளையும் முறைப்படி பயின்று தமது நாட்டிய அரங்கேற்றத்தினை வெற்றிகரமாகவும் சிறப்பான முறையில் அரங்கேற்றியுள்ளனர். அவ்வகையில் இதுவரையில் 5 மாணவிகள் அரங்கேற்றம் செய்துள்ளனர் என்பது இவரது ஆத்மார்த்தமான பயிற்றுவித்தலின் பெருமைக்குரிய விடயமாகும். மேலும் 2011ஆம் ஆண்டு அகில இலங்கை ரீதியாக நடைபெற்ற அரச நடன விழாவில் இவரது மாணவிகள் சிறுவர் , கனிஷ்ட , சிரேஷ்ட ஆகிய 3 பிரிவுகளில் முதலாம் இடத்தை பெற்றுள்ளனர். 2012ஆம் ஆண்டு கிழக்கு மாகாணத்தில் நடாத்தப்பட்ட எழுவானில் போட்டியில் சிறுவர், கனிஷ்ட பிரிவுகளில் முதலாம் இடத்தையும் , அகில இலங்கை ரீதியாக சக்தி தொலைக்காட்சி நடாத்திய ' சக்தி கிலாசிக்கல் டான்ஸ் ஸ்டார் 2010 ' போட்டியில் பங்குபற்றி மூன்றாம் இடத்தினைப் பெற்றனர். 2012ஆம் ஆண்டு சர்வதேச ரீதியாக நடாத்தப்பட்ட நடனப் பரீட்சையில் சித்தி பெற்று இவரது மாணவியொருவர் இலண்டன் செல்வதற்கு தெரிவு செய்யப்பட்டார். மேலும் சர்வதேச ரீதியில் ஜெயாஞ்சலி இன்டர்நேஷனல் (U.K) வினால் நடாத்தப்பட்ட நடனப்போட்டியிலும் தெரிவாகி இவரது நீண்ட கால கலைப் பணிக்கு ஓர் ஆத்ம திருப்தியையும் இவரது மாணவிகள் வழங்கியுள்ளனர்.

தொடர்ந்து இவரது நடனாலயத்தின் 18 ஆவது ஆண்டு நிறைவையொட்டி 2009 ஆம் ஆண்டு ' அபிநய சாதனா ' என்ற நாட்டிய விழாவுடன் சிறப்பு மலரையும் வெளியிட்டுள்ளார். அடுத்து 2014 இல் சிவ பூமியின் வரலாற்றில் நாயகனான திருக்கோணேஸ்வரப் பெருமானின் மகிமையையும் , சமுத்திர நீராற் சூழ்ந்த சிவஷேத்திரமான திருக்கோணேஸ்வரத்தின் பல நூற்றாண்டு பின்னணியைக் கொண்ட வரலாற்றை நாட்டிய நாடக வடிவில் ஆற்றுவதற்கு விருப்புக் கொண்டு ' தென்கயிலை வாசா' என்ற நாட்டிய நாடகத்தை மேடையேற்றியதோடு சிறப்பு மலரையும் வெளியிட்டுள்ளார். இவ் நாட்டிய நாடகமானது சுவாமி ஸ்வஸ்தானந்தாவின் (ஸ்ரீ லலிதாம்பிகை தேவஸ்தானம் ) மூலமாக வரலாற்று தொகுப்பு எழுதப்பட்டது. அவ் முழுமையான வரலாறு 6 காட்சிகளாக பிரிக்கப்பட்டது. முதலாவதாக திருக்கோணேஸ்வர ஆலயத்தின் வரலாறு இரண்டாவதாக இராவணனின் வருகை, ஆட்சிமுறை, வழிபாட்டு முறை மூன்றாவதாக குளக்கோட்ட மன்னனின் கட்டட திருப்பணி நான்காவதாக திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் தேவாரத் திருப்பதிகம் பாடியமை ஐந்தாவதாக போர்த்துக்கேயர் ஆலயத்தை இடித்து இறுதியாக புனருத்தாரணத்தின் பின் இன்றைய ஆலயத்தின் தோற்றப்பாடு இவ்வாறான காட்சிகளை மையமாகக் கொண்டு 12% பேர் உள்ளடங்கலாக பக்கவாத்தியக் கலைஞர்களின் ஒத்துழைப்பில் மேடையேற்றப்பட்டு மிகுந்த வரவேற்பும் இவருக்குக் கிடைக்கப்பெற்றது. அடுத்து 2017 ஆம் ஆண்டு நடனாலயத்தின் 25ஆவது ஆண்டு நிறைவையொட்டி (வெள்ளிவிழா) அதன்மூலம் நாட்டிய நிகழ்வுகளில் இவரது மாணவிகள் அனைவரும் மேடையேற்றபட்டதோடு பல கலைஞர்களுக்கும் இதன் மூலம் வாய்ப்பளித்து அவர்களையும் ஒன்று சேர்த்து வெற்றிகரமாக நிகழ்த்தி சிறப்பு மலரினையும் வெளியிட்டு திருக்கோணமலை மண்ணுக்கு தனது பரதக் கலையின் மூலம் பெருமையையும், மிகுந்த வரவேற்பையும் இக் கலைஞர் பெற்றுள்ளார். இவ்வாறாக









தொகுப்பு :-
திருமலை தட்சாயினி ஞானசங்கரன்

மிகுதி 13 ஆம் பக்கம் பார்க்க...

# மூத்த பரதநாட்டியக் கலைஞர் நாட்டியக் கலைமணி ரேணுகாதேவி செல்வபுத்திரன் கலைஞரின் சாதனைப் பயணம்

இவரின் நடன நிகழ்ச்சிகளை அரங்கேற்றும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் ஆரம்பக் காலத்தில் அவரின் பெற்றோரின் ஒத்துழைப்பும், இன்று அவரது கணவரின் பூரண ஒத்துழைப்பும் , சகோதர சகோதரிகளின் ஊக்கமும் , மாணவர்களின் தொடர்ச்சியான பயிற்சியும், மாணவர்களின் பெற்றோர்களின் ஆதரவோடும் , இவருக்கு ஆசைகளையும் அறிவுரைகளையும் வழங்கி வரும் இவரது மதிப்புக்குரிய ஆசான்களும் , பழைய மாணவர்கள் , நலன்விரும்பிகள் என அனைவரும் இவருக்கு இன்று வரை உறுதுணையாக இருந்து வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும். மேலும் இவரது நடனாலயத்தில் மாணவர்களுக்கு பரதக் கலையை மட்டு









மன்றி நற்பண்புகள் ,ஒழுக்கம் , நேர முகாமைத்துவம் ,விழுமியங்கள் போன்ற அனைத்து விடயங்களையும் மாணவிகளுக்கு கற்றுக் கொடுத்து வருகின்ற பெருமை இவரையே சாரும். மேலும் ஒவ்வொரு நடனப் போட்டிகளுக்கு மாணவர்களை தயார்படுத்தும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் இரவு பகல் பாராது பயிற்சி அளித்து அவர்கள் திறமையாக வெற்றி பெறுவதற்கு தனது கடின உழைப்பையும் நேர்த்தியான வழிகாட்டலையும் இக் கலைஞர் வழங்கி வருகின்றார்.

இவர் பிறரின் படைப்புகளுக்கும் தனது பங்களிப்பை வழங்கியுள்ளார். அந்த வகையில் 1995ஆம் ஆண்டு ''வித்தகம்'' என்ற நூலிற்கு அழகியற் கலையாம் பரதம் என்ற தொகுப்பையும் , 2010ஆம் ஆண்டில் திருக்கோணமலை சிவயோகபுரம் அருள்மிகு சிவகாம சுந்தரி சமேத நடேசர் ஆலய கும்பாபிஷேகம் மலரிற்கு ஆடவல்லான் ஆடுகின்றான் என்ற கட்டுரைத் தொகுப்பையும் எழுதியுள்ளார். மேலும் இவரால் ஜதீஸ்வரம் , கோணேசர் சப்தம் , பஞ்சமூர்த்தி கௌத்துவம் , பதம் ,வர்ணம் , கீர்த்தனம் , தில்லானா போன்ற உருப்படிகள் இயற்றப்பட்டுள்ளன. மேலும் கலைஞரின் கனவு , சரஸ்வதி கடாட்ஷம், தசாவதாரம் , பக்த மீரா , நவரச நாயகி , பழம் நீ , ஜேசு காவியம் , ஸ்கந்த லீலா, காளிங்க நர்த்தனம் , செபமாலை ராக்கினியின் மகிமை , ஒன்றுபட்டு வாழ்வோம் , நல்லைக்குமரன் குறவஞ்சி , கண்ணகி வழக்குரைத்தல், திருஞானசம்பந்தர் , தென்கயிலை வாசா போன்ற நாட்டிய நாடகங்களை அரங்கேற்றி நெறிப்படுத்தியுள்ளார். தொடர்ந்து இவர் சிவாம்ருதம் , நிருத்த நிருத்தியா , மயில்பீலீ நடனம் , பாம்பு நடனம் போன்ற பல ஆற்றுகைகளை செய்துள்ளார். இவ்வாறான பெருமையையும் புகழையும் பெற்றுத் தந்த எம் மண்ணின் கலைஞருக்கு அவரின் நாட்டியக் கலைத்துறையில் நாட்டிய கலைமணி, நாட்டிய வித்தகி, இசை நடன நவரத்னா, அபிநய ஆசான், ஸ்ரீ கிருஷ்ண அபிநய நர்த்தகி, கலைச்சுடர் போன்ற பட்டங்களை பெற்றுள்ளார்.

இதுவரையில் இவர் ஏராளமான சாதனைகளை குவித்து எமது திருக்கோணமலை மாவட்டத்திற்கு பெருமை சேர்த்துள்ளார். அவ்வகையில் , அவர் பெற்ற விருதுகளாக 2004ஆம் ஆண்டு திருக்கோணமலை மாவட்டத்தில் நாட்டிய கலைக்கு ஆற்றிய சேவையை பாராட்டி ஜெயாஞ்சலி விருது , 2010 சக்தி கிளாசிக்கல் டான்ஸ் ஸ்டார் விருது 3ம் இடம்

, 2011 இல் அகில இலங்கை ரீதியாக நடைபெற்ற அரச பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் எழுவானில் விருது, 2013இல் திருக்கோணமலை நகரில் நாட்டியத் துறையில் சிறப்பு பணிக்கும், அதன் மேன்மைக்கும் பங்களித்தமைக்காக நகர முதல்வர் விருது , 2014 இல் சர்வதேச ஜெயாஞ்சலி விருது , 2015இல் அரச நடன விழா விருது (கும்மி ), 201%இல் சுவாமி விபுலானந்தா அழகியல் கற்கைகள் நிறுவகத்தின் நிருத்திய விழாவில் கௌரவிக்கப்பட்டமை , 2018இல் திருக்கோணமலை





விழாவில் சிறுவர் ,கனிஷ்ட , சிரேஷ்ட மூன்று பிரிவுகளிலும் முதலாமிடம் மூன்றிற்கும் மூன்று விருதுகள் , திருக்கோணமலை

மாவட்ட செயலகத்தின் இசை நடன விழா 2011இல் சிறந்த நடன இயக்குனர் விருது, 2011இல் மகளிர் தினத்தை முன்னிட்டு இலங்கை வங்கியால் நடாத்தப்பட்ட விழாவில் சாதனை மிக்க பெண்மணிகளின் வரிசையில் சிறந்த சாதனையாளர் என்று பாராட்டி கௌரவிக்கப்பட்ட விருது, சிவசக்தி நர்த்தனஷேத்ரா (பரதநாட்டிய பாடசாலை )நிருத்திய மஞ்சரி 2011 இல் விருது , 2012ஆம் ஆண்டில் கிழக்கு மாகாணம் வலயக் கல்வி அலுவலகத்தினால் திருக்கோணமலை அகில இலங்கை தமிழ் மொழித் தினப் போட்டிகளில் நடுவராக பணியாற்றியமையை பாராட்டி விருது பெற்றமை , வட இலங்கை சங்கீத சபை 23 ஆவது பட்டமளிப்பு விழா 2019இல் இவரது கலைச்சேவையை கௌரவித்து விருது, கலைஞர்களுக்கான அரச விருது 2019இல் கலைச்சுடர் விருது , புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு வழிகாட்டலுடன் கலாசார அலுவல்கள் திணைக்களம் மற்றும் இலங்கை கலைக் கழகம் மற்றும் அரச நடனம் மற்றும் நாட்டிய



நாடக ஆலோசனைக்குழு ஒன்றிணைந்து ஏற்பாடு செய்யப்பட்ட கலை நிறுவனங்களுக்கு இடையிலான நடனப் போட்டி 2019 இல் இராஜரெட்ணம் நடனாலய 8 தொடக்கம் 12 வயது பிரிவின் கீழ் செம்பாட்டம் குழு போட்டிப் பிரிவில் முதலாம் இடம் பெற்றமைக்கு கலைஞருக்கு பாராட்டு சான்றிதழ் அளிக்கப்பட்டு விருது பெற்றமை குறிப்பிடத்தக்கன. ஒருமூத்த கலைஞராக நடனக் கலைத்துறையில் ஈடுபடும் மாணவர்களுக்கு இவர் கூற விரும்புவதாவது, ‘கை மலரால் வடிவம் காட்டியும் , முகமலரோடகமும் கூட்டியும், இகபரமோடிசைக்கு மாநடனம் ’ என்று சிறப்பிக்கப்படும் அழகிய நுண்கலை பரதநாட்டியமாகும். பரதக் கலையை மிகச் சிறப்பான முறையிலும் ,எளிதாகவும் தெளிவாகவும் , விளங்கிக் கொள்ளும் வகையில் கற்று வரும் ஒவ்வொரு மாணவரும் எந்த நிலைமையிலும் சிறந்த நடனக் கலைஞராக திகழ முடியும் என்பதே எனது எதிர்பார்ப்பு. சுருக்கமாகக் கூறினால் நடனக் கலைத் துறை பயிலும் ஒவ்வொரு மாணவர்களும் அதனை முயற்சி எடுத்து பயிற்சி செய்தால் உயர்ச்சி நிச்சயம் என்பதே எனது ஆழ்ந்த கருத்தாகும்.கலை இருந்தால் மட்டும் கலைஞர்களாக ஆகிவிட முடியாது நற்பழக்கவழக்கங்கள், தெளிவான நேர்த்தியான சிந்தனை இவை இரண்டும் அடிக்கல்லாக இருந்தால் மட்டுமே அவர்களின் கலையும் ஒன்று சேரும் இடத்தில் சிறந்த கலைஞராக மாறி விட முடியும் என்பதே எனது அனுபவத்தில் கண்ட உண்மையாகும். தொடர்ந்து இவர் நடன கலைஞர்களுக்கு கூற விரும்புவதாவது, மனித நாகரிக வரலாற்றில் கலைகளின் பங்கு ஒரு மகத்தான இடத்தை வகிக்கின்றது. கலைகளில் மயங்காத மனங்கள் இல்லை என்றே கூறலாம். அப்படிப்பட்ட ஒரு காந்தம் கலைகளுக்கே உரித்தான சிறப்பம்சமாகும். அக் கலைகளில் நடனக் கலையும் ஒன்றாகத் திகழ்கின்றது. அவ்வாறான நடனக் கலையை முறையாகப் பயின்று நடனக் கலைஞர்களாக மிளிரும் ஒவ்வொருவரும் திருக்கோணமலை புண்ணிய பூமியினைப் பெருமைப்படுத்தி வரலாறு படைக்க வேண்டும். எம் மண்ணின் கலாசாரத்தையும் , பாரம்பரியத்தையும் புகழுக்கு காணிக்கையாக்க வேண்டும் என குறிப்பிட்ட அவர் திருக்கோணமலையின் கலைஞர்களை இப் பகுதியினூடாக அறிமுகப்படுத்தி வரும் சுபீட்சம் பத்திரிகைக்கு மனதார நன்றியை தெரிவித்துக் கொள்வதோடு இப்பணித் தொடர வாழ்த்துவதாக இக் கலைஞர் குறிப்பிட்டார்.

இவ்வாறாக நம் திருக்கோணமலை மண்ணிற்கு தனது பரதக்கலை மூலம் பெருமையையும், புகழையும் பெற்றுத்தந்ததோடு தனது இராஜரெட்ணம் நடனாலயத்தின் மூலமாக பல நடனக்கலைஞர்களை உருவாக்கியும், உருவாக்கி வருகின்ற இக் கலைஞர் மென்மேலும் பரதத்துறையில் பல பணிகளைப் புரிய நீண்ட ஆயுளையும், தேகாரோக்கியத்தையும் பெற வேண்டுமென பிராத்திப்பதோடு இக் கலைஞரின் கலைப்பணித் தொடர வாழ்த்துவோம்.









**தொடரும்...**

**கலைஞர்களுக்கான
தேடலின் பயணத்தோடு**

## கீதாசாரம்

எது நடந்ததோ,
அது நன்றாகவே நடந்தது
எது நடக்கிறதோ,
அது நன்றாகவே நடக்கிறது
எது நடக்க இருக்கிறதோ,
அதுவும் நன்றாகவே நடக்கும்,
உன்னுடையதை எதை இழந்தாய்,
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய்,
அதை நீ இழப்பதற்கு
எதை நீ படைத்திருந்தாய்,
அது வீணாவதற்கு?
எதை நீ எடுத்துக்
கொண்டாயோ,
அது இங்கிருந்தே
எடுக்கப்பட்டது.
எதை கொடுத்தாயோ,
அது இங்கேயே
கொடுக்கப்பட்டது.
எது இன்று
உன்னுடையதோ,
அது நாளை
மற்றொருவருடையதாகின்றது
மற்றொரு நாள்
அது வேறொருவருடையதாகும்.

"அதுவே உலக நியதியும்
எனது படைப்பின் சாராம்சமுமாகும்".

**பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்**



## 31ம் நாள் நினைவஞ்சலி அழைப்பும், நன்றி நவிலலும்

**21.01.2022 – வெள்ளிக்கிழமை**



அமரர். திருமதி.

**பேரின்பராஜா கண்ணகைமணி**

மலர்வு
1944.02.07

உதிர்வு
2021.12.22

## 31ம் நாள் நினைவஞ்சலி அழைப்பிதழ்

திரு/திருமதி/செல்வி :......................................................................

.......................................................................................

கடந்த **22.12.2021** புதன்கிழமை அன்று
சிவபதமடைந்த எங்கள் பாசத்திற்குரிய

**அமரர். திருமதி. பேரின்பராஜா கண்ணகைமணி**

அவர்களின் 31ம் நாள் நினைவஞ்சலிக் கிரியைகள்
எதிர்வரும் **21.01.2022** வெள்ளிக்கிழமை அன்று
அன்னாரின் இல்லத்தில் நடைபெறும்,
அத்தருணத்தில் தாங்களும் தங்கள் குடும்பசகிதம்
வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்தி
பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து
நடைபெறும் மதிய போசன நிகழ்விலும்
கலந்து கொள்ளுமாறு தங்களை
அன்புடன் அழைக்கின்றோம்.

25 1ம் குறுக்கு,
ஞானசூரியம் சதுக்கம்,
மட்டக்களப்பு.
0652223334

இவ்வண்ணம்
குடும்பத்தினர்


## நன்றி நவிலல்

எங்கள் அன்பிற்கும் பாசத்திற்குமுரிய
இறைபதம் அடைந்த அன்பு தெய்வம்

அமரர். திருமதி.

**பேரின்பராஜா கண்ணகைமணி**

அவர்களின் மறைவு அறிந்து நேரில் வந்து
அஞ்சலி செலுத்தியவர்களுக்கும், ஆறுதல் கூறியும்,
எமக்கு பல வழிகளிலும் உதவி புரிந்த
உற்றார், உறவினர்கள், நண்பர்கள், சுற்றத்தார்,
இறுதி கிரியையின் போது சமூகமளித்தவர்கள் மற்றும்
தொலைபேசி மூலம் அனுதாபச் செய்தி அனுப்பியும்,
அனுதாபங்கள் தெரிவித்தும், பதாதைகள்,
பிரசுரங்களையும் வெளியிட்டு
அஞ்சலி செலுத்தியகர்களுக்கு,
சரீர உதவி பல செய்தும் இறுதி யாத்திரையில்
கலந்து கொண்டவர்களுக்கும்
எமது குடும்பத்தினர் சார்பாக மனமார்ந்த
நன்றிகளை தெரிவித்து கொள்கிறோம்



இவ்வண்ணம்
குடும்பத்தினர்